விலை: 50.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 09 வியாழக்கிழமை (25.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 341

நிரந்தர சமாதானத்துக்காக

# இலங்கைத் தமிழர்களுடன் அமெரிக்கா இணைகிறது

## அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர்



(வோஷிங்டன்) இலங்கையில் அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையில் மனித உரிமைகள் முக்கியமானவை. அத்தோடு நிரந்தர சமாதானத்துக்கு இலங்கைத் தமிழர்களுடன் அமெரிக்கா இணைகிறது என அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

சனிக்கிழமை வரை

## வடக்கில் கன மழைக்கு சாத்தியம்

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் சனிக்கிழமை வரை வட மாகாணத்தில் கன மழைக்கு சாத்தியம் இருப்பதாக யாழ்.பல் 15

கொடிகாமத்தில்

## 6 வயது சிறுமி கடத்தி துன்புறுத்தல்

### இளைஞன் கைது

(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி மேற்கு மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 6 வயதுச் சிறுமியை 15

## 'தேசியத் தலைவர்' பதத்தால் பாராளுமன்றில் பெரும் குழப்பம்

### ஹன்சார்ட்டிலிருந்து நீக்க வேண்டும் என பெரும்பான்மையினர் சபையில் வலியுறுத்து

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, பாராளுமன்றத்தில் தமது தேசியத் தலைவர் 15

## இரசாயன உர இறக்குமதிக்கு தனியார் துறைக்கு அனுமதி

### விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே



(கொழும்பு)
இரசாயன உரம், பீடைக்கொல்லிகள் மற்றும் திரவ உரங்களை இறக்குமதி செய்வதற்கு, தனியார் துறைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக விவ 15

## நினைவேந்தல்களை வீடுகளில் அனுஷ்டிக்கலாம்

### யாழில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(யாழ்ப்பாணம்)
யுத்தத்தில் இழப்புகளைச் சந்தித்தவர்கள் சட்டத்திற்கு உட்பட்டு நினைவேந்தல்களை வீடுகளில் அனுஷ்டிக்க முடியும் என பின் தங்கிய கிராமிய அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் 15

## மாகாண சபை தேர்தலை தோல்வி பயத்தால் அரசு இழுத்தடிக்கின்றது

### பாராளுமன்றில் சஜித் அணி குற்றச்சாட்டு

(கொழும்பு)
"மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஏன் அஞ்சுகின்றது? தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார். தோல்வி பயத்தால் தான் தேர்தலை அரசு இழுத்தடிக்கின்றது."
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும 15

## நினைவேந்தல் தடையை மீளப் பெறமுடியாது

### தடையை அகற்ற மேல் நீதிமன்றை நாடுங்கள் யாழ்.நீதவான் நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)
மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதித்து வழங்கிய கட்டளையை மீளப்பெற யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் மறுத்துள்ளது.

தடை உத்தரவு வழங்கி கட்டளையாக்கப்பட்டது நிரந்தரமானது என்றும் அதனை பிரதிவாதிகள் ஆட்சேபனை உட்படுத்தவேண்டுமாயின் மேல் நீதிமன்றை நாடுமாறும் யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம் அறிவுறுத்தினார்.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் சார்பில் கடந்த வெள்ளிக்கிழமை முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அனுமதியளித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

இந்த நிலையில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிகள் 15

## கொரோனா 23 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் பெண்கள் 12 பேர் உட்பட மேலும் 23 பேர் கொரோனாவுக்குப் பலியாகியுள்ள 15

தாயாருடன் நீராடச் சென்ற

## 4 வயது சிறுவன் நீரில் மூழ்கிப் பலி

### வவு. பாவற்குளத்தில் சம்பவம்

(வவுனியா)
வவுனியா பாவற்குளத்திற்கு தாயுடன் நீராடச் சென்ற 4 வயது சிறுவன் ஒரு 15

## சுவிஸில் இருந்து பணம் அனுப்பி யாழ்ப்பாணத்தில் வீடு மீது தாக்குதல்

### புலனாய்வாளர்களால் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)
அயல்வீட்டில் வசிப்பவருடன் இருந்த முரண்பாடு காரணமாக சுவிஸ் நாட்டில் இருப்பவர் வழங்கிய பணத்துக்காக தாக்குதல் மேற்கொண்ட இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி உடுவில் அம்பலவாணர் வீதியில் உள்ள வீடொன் 15

# கொக்குவில் கே.கே.எஸ் வீதியில் வீடு உடைத்து திருட்டு

கொக்குவில் கே.கே.எஸ் வீதியில் உள்ள வீடொன்றில் கூரை பிரித்து உள்நுளைந்த திருடர்கள் பணம் மற்றும் பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் வைத்தியசாலைக்கு சென்ற இச்சமயத்தைப் பயன்படுத்திக் கொண்ட திருடர்கள் கூரை ஓடுகளைப் பிரித்து உள்நுளைந்து அங்கிருந்த 55 ஆயிரம் ரூபாய் பணம்மற்றும்பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக கோப்பாய்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி **ஆ. நளாயினி**
அவர்களின் பாசமிகு தந்தையார்


**திரு. சுப்பிரமணியம் கணேசபிள்ளை**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரின்
ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(c-3083)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

## விழிநீர் அஞ்சலி



கொக்குவில் மத்திய சனசமூக
நிலையத்தினதும் விளையாட்டுக்
கழகத்தினதும் நிர்வாக சபை
உறுப்பினர் **த. பகீரதராஜ்**
அவர்களின் பாசமிகு சகோதரன்

**அமரர்**

**தம்பித்துரை சஞ்சீவ்ராஜ்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(8774)


**பிரிவால் துயருறும்**
**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்**
**விளையாட்டுக் கழகமும்**
K.C.C.C & K.C.C.C Sports Club

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கடந்த 27.10.2021 அன்று இறைபதம்
அடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர்**

**தம்பு திரவியம்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (24.11.2021) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (26.11.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இராஜமாணிக்கம் மண்டபத்தில் நடைபெறும் (வீடியோ கலாமினி - அச்சுவேலி) ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அன்னார் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும் மற்றும் வெளிநாட்டிலிருந்து தொலைபேசி அழைப்பு மூலம் துக்கம் விசாரித்தவர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தோற்றம் : 16.10.1943**
**மறைவு : 27.10.2021**

(8776)

**விமான நிலைய வீதி,**
**தம்பளை, அச்சுவேலி.**
**077 313 7129**
**077 975 3099**
**குடும்பத்தினர்**

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### வரவு - செலவுத் திட்டம் 2022

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 255 ஆம் அத்தியாயமான 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட வரவு - செலவுத் திட்டம் 2021.11.25 ஆம் திகதி தொடக்கம் ஏழு (07) நாட்களுக்கு அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகம், சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய மூன்று பொது நூலகங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நகராட்சி மன்ற அலுவலகம்,**
**சாவகச்சேரி,**
**2021.11.25**

**சிவமங்கை இராமநாதன்**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

(C-3084)

## வாடகை ஒப்பந்த கேள்வி அறிவித்தல் யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலை

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்குகின்ற சிற்றுண்டிச் சாலையினை 01.01.2022 - 31.12-2022 வரையான காலப்பகுதிக்கு வாடகை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- படிவக் கட்டணம் - ரூபா 500.00
- கேள்வி வைப்பு - ரூபா 10,000.00
- படிவ விநியோகம் - 25.11.2021 - 15,12,2021 ஆம் திகதி வரை
  (அலுவலக நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை)
- விண்ணப்பம் ஏற்பு - 16.12.2021ஆம் திகதி 15.00 மணி வரை

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**(தொலைபேசி இல. 021 222 2647)**

**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்.**

(C-3086)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி
உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
**திரு. ப. விமல்ராஜ்** அவர்களின் தாயார்
திருமதி

**உருத்திராதேவி பரமானந்தன்**

அவர்கள் நேற்று முன்தினம் (23.11.2021) செவ்வாய்க்
கிழமை அன்று இறைவனடி எய்தினார். அன்னாரது
இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(8773)

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் சங்கநிதி தபானந்தம்**



**மண்டைதீவு - 6**

**திதி : அபரபக்க (சஷ்டி)**

" புன்னகை பூத்தமுகம் பொலிவோடு
திகழ்ந்த முகம்
அன்பாக அணைத்த முகம்
அனைவரையும் கவர்ந்த முகம்
ஆறுதல் தந்த முகம்
எம்மை அந்தரிக்கவிட்டு அணைந்து
ஆண்டு மூன்று வந்ததம்மா!
எம் உயிர் உள்ளவரை உமை நாம் மறவோம்
அம்மா! தாயே! கற்பூர தீபமாய் ஒளிவீசி
எமை காத்தருள் புரிந்திடம்மா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அன்னை மடியில் : 1935.07.09**
**ஆண்டவன் அடியில் : 2018.11.28**

**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**என்றும் உன் நினைவோடு**
**குடும்பத்தினர்**

(C-3087)

### வன்மப் பேச்சு பேசுவோரே

# பாராளுமன்றில் செலவாகும் பணம் மக்கள் வரிப்பணம் என்பதை மறவாதீர்

## நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

**பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் மிகவும் மோசமான சொற்பிரயோகங்களை பயன்படுத்துவதை வன்மையாகக் கண்டித்துள்ள நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம்,இவ்வாறான கருத்துக்களை தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டுள்ளது.**

இது தொடர்பில் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றம் நாளொன்றுக்கு இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவழிக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

அவ்வாறு செலவு செய்வது இந்த நாட்டு மக்களின் பணம் என்பதை உங்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

அவ்வாறிருக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் மிகவும் மோசமான சொற்பிரயோகங்களை பயன்படுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறான கூற்றுக்களால் மக்களாகிய நாங்கள் மிகவும் வெட்கப்படுகிறோம்.

மேலும் இதுபோன்ற அறிக்கைகள் குறித்து எங்களுடைய சிறு பிள்ளைகள் எங்களிடம் கேட்கும்போது பெற்றோர்களாகிய நாங்கள் சந்திக்கும் சிரமங்களை பாராளுமன்றத்திற்கு தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்வதுடன் இவ்வாறான கருத்துக்களை தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்று, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# முல்லைத்தீவு மருத்துவமனையில் இருதய சிகிச்சைப்பிரிவு திறந்து வைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மிக நீண்டகாலமாக இல்லாமல் இருந்த இருதய சிகிச்சைப் பிரிவு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளரும் சட்ட மருத்துவ அதிகாரியுமான க.வாசுதேவ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சை நிபுணர் மருத்துவர் பு.லக்ஸ்மன் இருதய சிகிச்சை பிரிவினை திறந்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இருதய சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மிக நீண்ட தூரம் பயணம் செய்து குறித்த சிகிச்சைகளை பெற்று வந்தவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-281)



ஜேர்மனிய தூதுவர் ஹோல்கர் ஸுபேர்ட் மற்றும் உதவி தூதுவர் ஓலாப் மல்ஷோ ஆகியோருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு ஒன்றை நேற்று புதன்கிழமை கொழும்பில் மேற்கொண்டனர். இச் சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், மற்றும் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பிரதேச செயலாளர்கள் இடமாற்றம்

(குருமன்காடு)

வருடாந்த இடமாற்றத்தின் கீழ் வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் அமுலுக்கு வரும் வகையில் குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், வவுனியா பிரதேச செயலாளராக யாழ்ப்பாண பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்தின் கீழே குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (4-5-250)

# பொருளாதார நெருக்கடி ஜனவரிக்குள் குறையும்

## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

(கொழும்பு)

2022 ஜனவரி மாதத்திற்குள் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள அழுத்தம் குறைவடையும் என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

2022 ஜனவரி மாதம் வரை இந்த அழுத்தம் அதிகபட்சமாக இருக்கும் எனவும் அதன் பின்னர் படிப்படியாக குறையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றுலாத்துறையில் ஈடுபடுவோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று மத்திய வங்கி கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இதனைத் தெரிவித்தார். (நி-5)

# யாழில் தீவிரமடையும் டெங்கு!

## எச்சரிக்கிறார் பணிப்பாளர் கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

டெங்கு வைரஸ் தொற்றுள்ள ஒருவர் வெளி மாகாணங்களில் இருந்து இங்கு வருகை தரும் பட்சத்தில் டெங்கு நோய் யாழ்ப்பாணத்தில் தீவிரமாக பரவும் வாய்ப்புள்ளதென வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் கொரோனாத் தொற்று மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டத்துக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் நாம் மேற்கொண்ட நுளம்புகள் சம்பந்தமான பூச்சியியல் ஆய்விலே டெங்கு நோயைப் பரப்புகின்ற நுளம்புகளும் குடம்பிகளும் அதிகமாக காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

டிசெம்பர் 6 முதல் ஒரு வார காலப்பகுதியை யாழ்.மாவட்டத்தில் டெங்கு நுளம்பு கட்டுப்பாடு வாரமாக பிரகடனப்படுத்தப்படுவதுடன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை சிரமதானம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு வாரக் காலப்பகுதியில் பாடசாலைகள், பொது இடங்கள், அலுவலகங்கள், வீடுகளில் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டெங்கு நோய்த் தொற்றுள்ள ஒருவர் வெளி மாகாணங்களில் இருந்து இங்கு வருகை தருவாராயின் டெங்கு நோய் யாழ்.மாவட்டத்தில் தீவிரமாகப் பரவும் அபாயம் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-33)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 19 | 26 |
| 09 | 10 |
| 1935 | 2021 |



## அமரர். கணபதிப்பிள்ளை செல்வவிநாயகம்

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் உரும்பிராயிலுள்ள அவரது சகோதரரின் இல்லத்தில் இன்று (25.11.2021) காலை நடைபெறும். அத்துடன் எதிர்வரும் 27.11.2021 சனிக்கிழமையன்று நடைபெறவுள்ள அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(இ)

குடும்பத்தினர்

# பரு. பிரதேச செயலக அணி 20 ஓட்டங்களால் வெற்றி



யாழ். மாவட்ட பிரதேச செயலக இளைஞர் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது.

இப் போட்டியின் இறுதியாட்டம் பொன்னாலை விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக இளைஞர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணி வழங்கப்பட்ட 8 ஓவர்களில் 4 இலக்குகளை பறிகொடுத்து 85 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பில் நிரூபன் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும், ராஜா 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நல்லூர் பிரதேச செயலக இளைஞர் அணி சார்பில் பிரதாப் 3 விக்கெட்டுகளையும், நிமல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக இளைஞர் அணி 6 விக்கெட்டுகளை பறிகொடுத்து 65 ஓட்டங்களை மாத்திரம் பெற பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கியது.

நல்லூர் பிரதேச செயலக இளைஞர் அணி சார்பில் கிசாந் 24, நிமல் 15 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணி சார்பில் திஷாந் 2 விக்கெட்டுகளையும், ஜனன், ராஜா, கலை ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.(4-90)

# கயிறிழுத்தல் போட்டி

## யாழ். அணிக்கு வெள்ளிப்பதக்கம்



தேசிய மட்ட கயிறிழுத்தல் போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் பெண்கள் அணி வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

மாவட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான 33ஆவது தேசிய மட்ட போட்டியின் ஓர் அங்கமான பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து இரத்தினபுரி மாவட்ட இளைஞர் அணி மோதியது. இதில் யாழ்.மாவட்ட இளைஞர் அணி 1:2 என்ற செற் கணக்கில் தேல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

யாழ்.மாவட்ட பெண்கள் இளைஞர் அணி 2017, 2018 ஆம் ஆண்டுகளில் வெண்கலப் பதக்கத்தையும், 2019ஆம் ஆண்டு சம்பியன் பட்டத்தையும், இவ்வாண்டு வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-90)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2456

ஜதீஸ்

ஒரு நல்ல சிரிப்பு ஒரு நீண்ட தூக்கம்
இரண்டும் எதையும் குணப்படுத்தும்



தனுஜன்

ஓட்டுநர் மது அருந்தியிருந்தால்
பஸ் ஸ்டார்ட் ஆகாது ...
புதிய வசதிகளுடன் வரும் அரசுப் பேருந்துகள்



கண்டக்டர் ஸ்ரார்ட் பண்ணிக் கொடுத்தா
என்னடா பண்ணுவீங்க

லதீஸ்

கணவன்- என் கூட உட்கார்ந்து சாப்பிடுறியா..
மனைவி- வேணாம் பசிக்கல...



கணவன்- ஏ என்னாச்சி..
மனைவி- இப்ப தான் சாப்பிட்டேன்.அதான்...

திலானி



நாம என்னதான் விழுந்து கும்பிட்டு
வேண்டினாலும் கடவுள் ரியாக்சன் என்னவோ?
அண்ணனுக்கு ஒரு ஊத்தப்பம்

திலானி



வீடுகள் சிறியதாய் இருந்த போது குடும்பம் பெரியதாய் இருந்தது

வீடுகள் பெரியதாய் மாறிய பின் குடும்பங்கள் சிறியதாய் போனது

டிலானி

என்ன நம்ம வாழ்க்கையில திடீர்னு சந்தோசம்
எல்லாம் வருது...



ரைட்டு! அடுத்து ஏதோ ஒரு
பிரச்சினை வர போவுது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இராசிபலன்

25.11.2021
கார்த்திகை 09, வியாழக்கிழமை
சஷ்டி பின்னிரவு 12.58 மணிவரை
பூசம் பிற்பகல் 4.10 மணிவரை
சுபநேரம் 7.42-9.12 மணிவரை
இராகுகாலம் 1.42-3.12 மணிவரை
சந்திராஷ்டமம்: பூராடம், உத்தராடம்
அமிர்த சித்தம்

வளவன்


மேஷம்

மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், பெற்றோரின் ஆதரவால் பெருமை காண்பீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.


ரிஷபம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.


மிதுனம்

உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், தன வரவு திருப்தி தரும்.


கடகம்

கனிவாய் பேசி காரியம் சாதிப்பீர்கள், நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத்தேடி வரலாம், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.


சிம்மம்

திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.


கன்னி

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


துலாம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொதுவாழ்வில் புகழ் கூடும், ஆரோக்கியமான நாள்.


விருச்சிகம்

கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.


தனுசு

திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை தாமதங்கள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், பணப் பற்றாக்குறையுண்டு.


மகரம்

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


கும்பம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


மீனம்

வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

உனது வார்த்தை மற்றவர் செவியில் தேன்போல பாயட்டும்

# உள்நாட்டு உற்பத்திகளுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்

## பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**எரிபொருள், மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்கு நாட்டில் டொலர் தட்டுப்பாடு நிலவி வருவதால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய மற்ற பொருட்கள் மீண்டும் தடைசெய்யும் வாய்ப்புக்கள் உள்ளன.**

நாட்டின் மிகப்பெரிய அந்நியச் செலாவணி நெருக்கடி உள்ள நிலையில் சொக்லேட், சீஸ், ரொபி, பாஸ்தா, அப்பிள், ஒரேஞ், திராட்சை போன்ற அத்தியாவசியமற்ற மற்றும் அவசர மற்ற பொருட்கள் கொண்டு வருவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாட்டில் உள்ள குறைந்த அளவிலான அந்நிய செலாவணி கையிருப்பினை செலவு செய்வது பொருத்தமற்ற செயல் என பொருளாதார மற்றும் நிதி வல்லுநர்களும் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கு முன்னர் அத்தியாவசிய பொருட்களுக்கு இறக்குமதி தடை விதிக்க மத்திய வங்கி நடவடிக்கை மேற்கொண்டு பின்னர் அதனை இரத்து செய்தது.

அந்த நடவடிக்கையே இவ்வாறு அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பிற்கு காரணமா? என பொருளாதார வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். உயர்தர சொக்லேட்கள், சீஸ் வகைகள், பிற தின்பண்டங்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த நேரத்தில் உள்நாட்டு உற்பத்திகளுக்கே சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் இந்த நிலையில் அத்தியாவசிய பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

## கட்டணங்களை செலுத்த QR முறைக்கு அனுமதி

(கொழும்பு)


திரவப்பணப் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கத்துடன் LANKA QR கட்டண முறையினூடாக அதிவேக நெடுஞ்சாலைகளில் கட்டணங்களை அறவிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, இந்தக் கட்டண முறை எதிர்காலத்தில் அதிவேக நெடுஞ்சாலைகளில் உள்ள கட்டண அறவீட்டு நிலையங்களில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கைபேசிகளில் குறித்த தொகையை உள்ளிட்டு எந்தவொரு வங்கியினதும் LANKA QR செயலியின் ஊடாக நுழைவாயிலில் காணப்படும் QR குறியீட்டை ஸ்கான் செய்து கட்டணத்தை செலுத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கட்டண முறைமையை அமுலாக்குவதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

## பெருந்தொகைப் பணத்துடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது



(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வர்த்தகர் ஒருவர் சட்ட விரோதமான முறையில் பெருந்தொகைப் பணத்தை டுபாய்க்கு கொண்டு செல்ல முயற்சித்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கோடியே 40 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உள்நாட்டு மற்றும் சர்வதேச நாணயம் காணப்பட்டதாக சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது.

டுபாய் செல்வதற்காக வந்திருந்த குறித்த சந்தேக நபர் பயணப் பொதியில் சூட்சுமமாக வைத்து பணத் தொகையை கொண்டு செல்ல முயற்சித்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-5)

## ஊடக சட்டங்களை திருத்துவதற்கு அனுமதி

### டலஸின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சட்டங்கள், சர்வதேச சட்டங்கள், தேசிய மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி இலங்கை ஊடக கொள்கையொன்றை தயாரிப்பது தொடர்பாக தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் டலஸ் தெரிவித்தார்.

ஊடகம், சந்தைப்படுத்தல், கல்வி, சட்டம், நிர்வாகம் மற்றும் பொருளாதாரம்போன்ற துறைகளில் அனுபவமுள்ள நபர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்காக ஊடகத்துறை அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-5)

## இரண்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் இரண்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5)


## தேசிய எரிபொருள் வாயு நிறுவனம் ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு நிறுவனமாக தேசிய எரிபொருள் வாயு நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2021 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5 ஆம் பகுதியின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மான பொறுப்புகள் குறித்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன. (நி-5)

## தேசிய பாடசாலையாக தரமுயரும் வரணி மத்திய கல்லூரி



(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட வரணி மத்திய கல்லூரியை அடுத்த கட்டமாக தேசிய பாடசாலை திட்டத்திற்குள் உள்ளீர்க்க நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் செயலாளரும், கரவெட்டி பிரதேசசபை உறுப்பினருமான ச.இராமநாதன் தெரிவித்தார்.

அண்மையில் பாடசாலையில் இடம்பெற்ற மைதான அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவத்தை தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பாடசாலை அதிபரின் கோரிக்கையை ஏற்று வரணி மத்திய கல்லூரியை தேசிய பாடசாலையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இது தொடர்பாக பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் கருத்து தெரிவிக்கையில்,

வரணி பிரதேசம் வடமாராட்சி- தென்மராட்சி பிரதேசங்களின் இணைப்பாக காணப்படுகிறது.

கிராமியம், இடவசதி,கல்வி அடைவு மட்டம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு எமது பாடசாலை தேசிய பாடசாலை திட்டத்திற்குள் உள்ளீர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இம்முறை எமது பாடசாலை அந்த திட்டத்திற்குள் உள்ளீர்க்கப்படவில்லை.

எமது பாடசாலையில் இருந்து மூன்று மாணவர்கள் பொறியியல் பீடம் செல்கிறார்கள். அதனை விட க.பொ.த சாதாரண தரத்திலும் 75 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இந் நிலையில் எமது பாடசாலையை தேசிய பாடசாலையாக தரமுயர்த்த வேண்டும் என தெரிவித்தார். (4-5-30)

## கீரிமலை செம்பன் வாய்க்கால் மயான வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீரிமலை செம்பன் வாய்க்கால் இந்து மயான வீதியை புனரமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி. வடக்கு பிரதேச செயலகத்தின் ஆளுகைக்குட்பட்ட கீரிமலை செம்பன் வாய்க்கால் இந்து மயானம் மீள்குடியமர்வுக்குப் பின்னர் படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்டு மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டது.



எனினும் குறித்த மயானத்திற்கான பாதை சீரின்மை காரணமாக மயானத்திற்கு எரியூட்ட உடலங்களைக் கொண்டு செல்வதில் பொதுமக்கள் பாரிய இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாதை சீரின்மை காரணமாக மழை காலங்களில் அவ்வீதி சேறும் சகதியுமாகக் காணப்படுவதாகவும் மக்கள் செல்ல முடியாத அளவிற்கு கற்கள் நிறைந்து காணப்படுவதாகவும் தெரிய வருகிறது.

குறித்த மயானத்தின் எரியூட்டல் தளத்தில் போடப்பட்டிருந்த தகரக் கொட்டகையும் பூர்த்தி செய்யப்படாமல் காணப்படுவதனால் மழை காலத்தில் உடலங்களை எரியூட்ட மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

இவ் வீதியில் இருந்து சுமார் முப்பது மீற்றர் தூரத்தில் கடல் இருக்கின்ற போதும் வீதியில் மழை காலத்தில் வெள்ளம் நிறைந்து காணப்படுவதை மக்கள் விசனத்துடன் தெரிவித்தனர்.

எனவே இவ் வீதி மற்றும் மயான புனரமைப்பினை வலி. வடக்கு பிரதேச சபை விரைந்து மேற்கொண்டு மக்கள் பாவனைக்கு உகந்ததாக மாற்றியமைக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5)

## பருத்தித்துறை நகர சபையின் 2022 பாதீடு நிறைவேற்றம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகர சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சபைத் தவிசாளரின் மேலதிக ஒரு வாக்கினால் நிறைவேறியது. தவிசாளர் யோசப் இருதயராஜா வரவு-செலவுத் திட்டத்தை நேற்று சபையில் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பில் சமநிலை ஏற்பட்டமையால் வெற்றி, தோல்வியை தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலையில் சபைத் தவிசாளருக்கு உள்ள தற்துணிவு அதிகாரத்துக்கு அமைய அவர் மேலதிக ஒரு வாக்கினை அளித்தமையால் வரவு- செலவுத் திட்டம் நிறைவேறியது. (4-5-60)



Youth Action Network - Sri Lanka (YAN Sri Lanka)

இளைஞர் வலயமைப்பினால் மதுபானம் மற்றும் சிகரெட் பாவனையினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் கடந்த சனிக்கிழமை யாழ். பேருந்து நிலையம் முன்பாக சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இடம் பெற்றது. (படம்- கஜிந்தன்)

## இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான நேர்முகத்தேர்வுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒரு இலட்சம் அரச காணித்துண்டுகள் வழங்கும் நேர்முகத்தேர்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால், மேற்படி காணித்துண்டிற்காக விண்ணப்பித்தவர்களில் ஒரு குடும்பத்தில் யாராவது ஒருவருக்கேனும் நேர்முகக் கடிதம் கிடைக்காதோர் 26.11.2021- 03.12.2021 காலப் பகுதியில் நேர்முகப் பரீட்சைக்கு ஏற்றவாறு,

ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியதான ஆவணம்,

வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலரால் வழங்கிய சான்றிதழ், தொழில்முயற்சியினைத் தொடங்குவதற்கு தமக்கு சொந்தமாகக் காணி இல்லையெனில் அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு சத்தியக் கடதாசி, தொழில் முயற்சி தொடர்பான கருத்திட்ட அறிக்கை ஆகியவற்றுடன் அலுவலக நேரத்தில் நல்லூர் பிரதேச செயலக காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் கிளைக்கு சமூக மளிக்குமாறு பிரதேச செயலா-ளர் அறிவித்துள்ளார். (4-5)

## வரவேற்பைப் பெற்ற 'கார்த்திகை வாசம்' மலர் முற்றம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கார்த்திகை வாசம் என்ற பெயரில் மலர்ச் செடிகள் மற்றும் மரக்கன்றுகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் 'மலர் முற்றம்' என்ற காட்சித்திடலை கடந்த 20 ஆம் திகதி திறந்து வைத்தது.

இம்மலர் முற்றத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தாவர உற்பத்தியாளர்கள் காட்சிக்கூடங்களை அமைத்துள்ளனர்.

இம்மலர் முற்றத்தில் தினமும் பல நூற்றுக்கணக்கானவர்கள் மலர்ச் செடிகளையும் மரக்கன்றுகளையும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

பொதுமக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இம் மலர் முற்றத்தில் காட்சிக் கூடங்களுடன் பார்வையாளர்களுக்கு ஆரோக்கிய இலைக் கஞ்சி வழங்கும் மையம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம்மலர் முற்றம் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை திறந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 360 | 380 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 |
| தக்காளி | 400 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 250 | 350 | 350 |
| கரட் | 320 | 350 | 400 |
| பூசணி | 60 | 50 | 60 |
| புடோல் | 280 | 180 | 240 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 150-160 | 160 |
| பாகற்காய் | 650 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 350 | 300 | 350 |
| லீக்ஸ் | 350 | 370 | 400 |
| பீற்றூட் | 120 | 160 | 200 |
| கறிமிளகாய் | 450 | 600 | 480 |
| முருங்கைக்காய் | -- | 600 | 600 |
| போஞ்சி | 320 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | -- | -- | 400 |
| முள்ளங்கி | 120 | -- | 240 |
| பொன்னாங்காணி | 50 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | -- | -- | 140 |

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

## சபை நிதி-2021

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. பொது நிதிச் சுற்றறிக்கை 04/2016(1) ற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பு, கட்டட நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை **(CIDA)** பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.**

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை 25.11.2021 ஆம் திகதியில் இருந்து 08.12.2021 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம்** எனும் இடத்திலிருந்து 25.11.2021 ஆம் திகதியிலிருந்து 09.12.2021 ஆம் திகதி வரையுள்ள வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 09.12.2021 ஆம் திகதி பி.ப 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலி. கிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 01.12.2021 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

11. மேற்படி கேள்விகோரல் தொடர்பில் வலி.கிழக்கு பிரதேச சபையின் பெறுகை குழுவின் முடிவே இறுதியானது. பெறுகை குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. **கேள்வி ஆவணங்களை வழங்கும் போது கொரோனா (COVID 19) வைரஸ் தொற்றுத் தொடர்பான சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும், கேள்வி ஆவணங்களை பெறவரும்போது கூட்டமாக வருவதை தவிர்த்து ஒருவர் மட்டும் வருகை தரவேண்டும், சுகாதார முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வருகை தரவேண்டும்.**

| | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (MN) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41(13)/2 / Council/PII/01/2021 | மடத்தடி வீதி 4ம் ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி வடக்கு | 1.07 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 10,745/- | 2022.03.07 |
| 02 | NP/14/41(13)/2 /Council/PII/02/2021 | விமான நிலைய வீதி திருத்தம், பத்தைமேனி | 2.71 | 60 நாட்கள் | C8 / C7 (Highways) | 88 நாட்கள் | 27,172/- | 2022.03.07 |
| 03 | NP/14/41(13)/2 /Council/PII/03/2021 | கல்வியோரம் வீதி திருத்தம், அச்சுவேலி தெற்கு | 0.80 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 8,011/- | 2022.03.07 |
| 04 | NP/14/41(13)/2 /Council/PII/04/2021 | பைத்தோலை வீதி திருத்தம், அச்சுவேலி தெற்கு | 1.14 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,480/- | 2022.03.07 |
| 05 | NP/14/41(13)/2 /Council/PII/05/2021 | குருக்கள் வீதி திருத்தம், அச்சுவேலி வடக்கு | 1.10 | 60 நாட்கள் | C9/C8 (Highways) | 88 நாட்கள் | 11,040/- | 2022.03.07 |
| 06 | NP/14/41(13)/2 /Council/PII/06/2021 | வளலாய் சந்தை திருத்தம் | 0.64 | 60 நாட்கள் | C9 / C8 | 88 நாட்கள் | 6,495/- | 2022.03.07 |
| 07 | NP/14/41(13)/2 /Council/PII/07/2021 | கூனன்காடு இந்து மயானத் திருத்தம், வளலாய் | 0.46 | 60 நாட்கள் | C9 / C8 | 88 நாட்கள் | 4,640/- | 2022.03.07 |
| 08 | NP/14/41(13)/2 /Council/PII/08/2021 | ஔவையார் சனசமூக நிலைய வீதி திருத்தம், நவக்கிரி | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,025/- | 2022.03.07 |
| 09 | NP/14/41(13)/2 /Council/PII/09/2021 | காட்டுவெளி வீதி திருத்தம், ஆவரங்கால் | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,100/- | 2022.03.07 |
| 10 | NP/14/41(13)/2 /Council/PII/10/2021 | வன்னியசிங்கம் வீதியும் உப ஒழுங்கையும் திருத்தம், ஆவரங்கால் மேற்கு | 1.35 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 13,565/- | 2022.03.07 |
| 11 | NP/14/41(13)/2 /Council/PII/11/2021 | வரிக்கம்பரை வீதியில் மதகு அமைத்தல், புத்தூர் கிழக்கு | 0.25 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 2,600/- | 2022.03.07 |
| 12 | NP/14/41(13)/2 /Council/PII/12/2021 | வீரவாணி வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், வாதரவத்தை | 0.83 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 8,315/- | 2022.03.07 |
| 13 | NP/14/41(13)/2 /Council/PII/13/2021 | கலைவாணி வீதி திருத்தம் கட்டம் 2, புத்தூர் கிழக்கு | 0.91 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 9,160/- | 2022.03.07 |
| 14 | NP/14/41(13)/2 /Council/PII/14/2021 | பெற்றோல் செட் அருகாமை வீதி திருத்தம், சிறுப்பிட்டி | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,100/- | 2022.03.07 |
| 15 | NP/14/41(13)/2 /Council/PII/15/2021 | ஞானவைரவர் வீதி 1ம் குறுக்கு ஒழுங்கை திருத்தம், சிறுப்பிட்டி வடக்கு | 1.11 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,170/- | 2022.03.07 |
| 16 | NP/14/41(13)/2 /Council/PII/16/2021 | தனிப்பனை வீதி, வேவிபுரம் வீதி திருத்தம், அச்செழு | 2.46 | 60 நாட்கள் | C8 / C7 (Highways) | 88 நாட்கள் | 24,660/- | 2022.03.07 |
| 17 | NP/14/41(13)/2 /Council/PII/17/2021 | ஐயாவத்தை வீதி உப ஒழுங்கை திருத்தம், நீர்வேலி தெற்கு | 0.78 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 7,890/- | 2022.03.07 |
| 18 | NP/149/41(13)/2 /Council/PII/18/2021 | பேக்கரி அருகாமை வீதி திருத்தம், நீர்வேலி தெற்கு | 1.03 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 10,310/ | 2022.03.07 |
| 19 | NP/14/41(13)/2 /Council/PII/19/2021 | கயட்டைப்புலம் வீதி திருத்தம் தொடர் வேலை (கருணை இல்லம் வீதி), நீர்வேலி தெற்கு | 6.20 | 90 நாட்கள் | C7 / C6 (Highways) | 118 நாட்கள் | 62,050/- | 2022.04.06 |
| 20 | NP/14/41(13)/2 /Council/PII/20/2021 | சரஸ்வதி சனசமூக நிலைய வீதி திருத்தம், நீர்வேலி வடக்கு | 0.80 | 60 நாட்கள் | C8 / C7 (Highways) | 88 நாட்கள் | 8,050/- | 2022.03.07 |
| 21 | NP/14/41(13)/2 /Council/PII/21/2021 | செல்லத்துரை, கலைவாணி முன்பள்ளி முன் வீதி திருத்தம், இருபாலை | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,070/- | 2022.03.07 |
| 22 | NP/14/41(13)/2 /Council/PII/22/2021 | பெரியபுலம் வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.89 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 18,975/- | 2022.03.07 |
| 23 | NP/14/41(13)/2 /Council/PII/23/2021 | வைராக்கண்டி வீதி திருத்தம், கோப்பாய் மத்தி | 1.00 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 10,100/- | 2022.03.07 |
| 24 | NP/14/41(13)/2 /Council/PII/24/2021 | கல்வியியற் கல்லூரி (வடக்கு) பின் வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 2.17 | 60 நாட்கள் | C8 / C7 (Highways) | 88 நாட்கள் | 21,710/- | 2022.03.07 |
| 25 | NP/14/41(13)/2 /Council/PII/25/2021 | கொய்யாத்தோட்ட வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், இருபாலை கிழக்கு | 1.09 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 10,935/- | 2022.03.07 |
| 26 | NP/14/41(13)/2 /Council/PII/26/2021 | ஆஸ்பத்திரி வீதி திருத்தம், உரும்பிராய் மேற்கு | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,100/- | 2022.03.07 |
| 27 | NP/14/41(13)/2 /Council/PII/27/2021 | கற்பகபிள்ளையார் 3ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் வடக்கு | 1.38 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 13,805/- | 2022.03.07 |
| 28 | NP/14/41(13)/2 /Council/PII/28/2021 | மானிப்பாய் வீதி 4ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் வடக்கு | 1.38 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,100/- | 2022.03.07 |
| 29 | NP/14/41(13)/2 /Council/PII/29/2021 | ஊரெழு 1ம் குறுக்கு வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 0.82 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 8,265/- | 2022.03.07 |

தியாகராஜா நிரோஷ்,
தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

(C-3085)

# வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திற்கு

## வடக்கு அரச கால்நடை வைத்தியர்கள் சங்கத்தின் விளக்கம்

**20/10/2021 அன்று வலம்புரியில் வெளியாகிய ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் வடமாகாண அரச கால்நடை வைத்தியர்கள் சங்கம் தன்னிலை விளக்க அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளது.**

**சங்கத்தின் தலைவர் கால்நடை வைத்தியர் எம்.முரளிதாஸ், செயலாளர் கால்நடை வைத்தியர் ரி.செந்தூரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அறிக்கை அப்படியே இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)**

ஆசிரியர்
வலம்புரி

20/10/2021 ஆம் திகதிய வலம்புரி ஆசிரியர் தலையங்கத்தில் வடக்கில் மந்தமடைந்துள்ள கால்நடை வைத்திய சாலைகள் என்று தலைப்பிடப்பட்டு பிரசுரிக்கப்பட்ட கட்டுரையில் வடமாகாணத்தில் உள்ள பெரும்பாலான அரச கால்நடை வைத்தியர்கள் திருப்தியான சேவையினை கால்நடை வளர்க்கும் பண்ணையாளர்களுக்கு வழங்குவதில்லை என்ற கருத்துத் தொடர்பாக வடமாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் தன்னிலை விளக்கம் ஒன்றை தங்களுக்கு முன்வைக்க விரும்புகின்றது.

இத்தன்னிலை விளக்கத்தையும் தங்களது பத்திரிகையில் பிரசுரித்து சகல தரப்பினரது கருத்தையும் உள்வாங்கும் பத்திரிகைத் தர்மத்தை நிலைநாட்டுவீர்கள் என நம்புகின்றோம். எமது சங்கத்திற்கும் வலம்புரிப் பத்திரிகைக்கும் இடையில் நீண்டகாலமாக ஒரு நல்லுறவான தொடர்பாடல் இருந்தும் இச்செய்தி பிரசுரிக்க முன் சகல அரச கால்நடை வைத்தியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச கால்நடை வைத்தியர்கள் சங்கத்தின் வடமாகாணக் கிளையிடம் இருந்து இச்செய்தியின் உண்மைத்தன்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் பிரஸ்தாபிக்காதது மிகவும் மனவருத்தமான ஒரு சம்பவமே.

வடக்கு மாகாணத்திலுள்ள அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்கள் பல்வேறுபட்ட வளப்பற்றாக்குறைகள் காரணமாக மிகுந்த சிரமத்திலேயே பண்ணையாளர்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்கி வருகின்றது. எனினும் பண்ணையாளர்களுக்குரிய வெளிக்கள வேலைகளையும் கால்நடைகளுக்குரிய மருத்துவ ஆலோசனைகள், மருத்துவ சிகிச்சைகள், தடுப்பு மருந்தேற்றல், செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மற்றும் செல்லப்பிராணிகளுக்குரிய தடுப்பூசி ஏற்றல், சிகிச்சைகளையும் திறம்பட ஆற்றி வருகின்றனர்.

இதன் பெறுபேறுகளே புள்ளிவிபர அடிப்படையில் அகில இலங்கை ரீதியாக, வெளிநோயாளர் பிரிவு மற்றும் வெளிக்களச் சிகிச்சைகளில் அதிகூடிய எண்ணிக்கையான கால்நடைகளுக்கு மற்றும் செல்லப்பிராணிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

கோழிகளுக்கான நோய்களுக்குரிய தடுப்பூசி வழங்குவதில் வடமாகாணம் முதலாம் இடத்திலும் கால்நடைகளுக்குரிய நோய்த்தடுப்பூசி வழங்குவதில் வடமாகாணம் மூன்றாம் நிலையிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஒவ்வொரு அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான வெளிக்கள விரிவாக்கல் மற்றும் பண்ணை விலங்குகளின் தரங்கள் உயர்த்தப்பட்டு வழங்கப்படும் சேவையின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படும் பால் உற்பத்தியில் தேசிய ரீதியில் வடமாகாணம் நான்காம் நிலையில் இருப்பதுடன் அண்மையில் 16/10/2021 அன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட பால் உற்பத்தி வலையமைப்பை புத்துயிர் அளிக்கும் கலந்துரையாடலில் யாழ்.அரச அதிபரினால் யாழ்.மாவட்டம் தேசிய ரீதியில் பால் உற்பத்தியில் நான்காவது மாவட்டமாக இருப்பதாகக் கூறியிருப்பது அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களினால் தொடர்ச்சியாக வழங்கப்படும் அர்ப்பணிப்பான சேவையை மேலும் உறுதி செய்துள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் அமைந்துள்ள ஒவ்வொரு அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களும் கால்நடை அபிவிருத்தி மற்றும் உற்பத்தி சம்பந்தமாக பண்ணையாளருக்கான விரிவாக்கல் சேவைகளையும், கால்நடை வளர்ப்பின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் நோய்களுக்குரிய தடுப்பு நடவடிக்கைகளையும், மத்திய மற்றும் மாகாண அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்தலையும், எமது திணைக்களம் தவிர்ந்த மற்றத் திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக நடைமுறைப்படுத்தப்படும் திட்ட அமுலாக்கத்திற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் மற்றும் பண்ணை விலங்குகளின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு அவ்விலங்குகளை தரம் உயர்த்துவதற்கான செயற்கை முறை சினைப்படுத்தல் சேவைகளையும் பிரதான சேவைகளாக வழங்கி வருகின்றது.

இங்கு உற்பத்திசார் மற்றும் உற்பத்தி சாரா (நாய், பூனை, அழகுப் பறவைகள் போன்றன) விலங்குகளுக்கான சிகிச்சை அளித்தல் கால்நடை வைத்தியர் அலுவலகங்களின் பிரதான இலக்குகளாக கொள்ளப்படவில்லை என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேற்படி பிரசுரிக்கப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தில் வடக்கில் மந்தமடைந்துள்ள கால்நடை வைத்தியசாலைகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரேயொரு கால்நடை வைத்தியசாலை தவிர்ந்த மற்றையவை யாவும் அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களாகவே இயங்கி வருகின்றன என்பதனை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

குறித்த ஒரேயொரு பிராந்திய கால்நடை வைத்தியசாலையும் கால்நடை வைத்திய சாலைக்குரிய எவ்வித அடிப்படைக் கட்டமைப்பையும் கொண்டிராது தற்காலிகமான ஒரு கட்டடத்தில் இயங்கி வருவதுடன் அனைத்துப் பண்ணையாளர்களும் தமது வைத்திய சேவையை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான ஒரு மத்திய நிலையமாக இல்லாமல் இருப்பதுடன் அங்கு நோயுற்ற விலங்குகளை அனுமதித்து சிகிச்சை வழங்கும் எவ்விதமான கட்டமைப்புகளையும் இதுவரை கொண்டிராததுடன், 24 மணித்தியால சிகிச்சை வழங்கலுக்குரிய நிலையமாகவும் இல்லாது இருப்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கால்நடைகளுக்கான சுகாதார சேவைகளை வினைத்திறனாக்குவதற்கு மாவட்டத்திற்கு ஓர் அரச கால்நடை வைத்தியசாலை அமைக்க வேண்டும் என உயர் அதிகாரிகளுடனான சந்திப்பில் அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் ஒன்றினை முன்வைத்துள்ளது என்பதனையும் இங்கு கூற விரும்புகின்றோம்.

இவ்வாறு பல்வேறுபட்ட நெருக்கடிகளினூடாக மிகுந்த வளப்பற்றாக் குறைகளுடன் சேவையை வழங்கி வரும் அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களையும் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளையும் ஒட்டுமொத்தமாக குறை கூறியிருப்பது அவர்களை மேலும் மன உளைச்சல் நிலைக்கே இட்டுச் சென்றுள்ளது.

அதிகரித்துவரும் கால்நடை வளர்க்கும் பண்ணையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களின் வளங்கள் மேம்படுத்தப்படாததுடன் குறிப்பாக அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலகர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படாமை யாவரும் அறிந்ததே.

அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களின் சேவை நேரம் மு.ப. 8.15 முதல் பி.ப. 3.30 வரையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இக்கால எல்லைக்குள் அலுவலகத்திற்கு வரும் பண்ணையாளர்களின் சேவையினை நிவர்த்தி செய்து, நோயுற்ற விலங்குகளுக்கு சிகிச்சை வழங்கி, வெளிக்களத்திலும் சேவை புரிய வேண்டிய நிலையிலேயே அரச கால்நடை வைத்தியர்கள் தமது சேவைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அலுவலக நேரத்தின் பின்னரும் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களிலும் இவ் அலுவலகங்கள் ஊடாக சேவை வழங்குவதற்கான ஒரு பொறிமுறை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் உருவாக்கப்படவில்லை.

மேலும் அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களில் விலங்குகளுக்கான சிகிச்சை அளித்தல் இலவசமாக இல்லாத நிலையில் அவற்றிற்கு சிகிச்சை வழங்குவதற்கான மருந்துகளைப் பாவிப்பதற்கான அரச அனுமதி பெற்ற ஒரு பொறிமுறை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் இதுவரை உருவாக்கப்படாததாலும், அரச வாகனங்களைப் பாவித்து வெளிக்களத்தில் நோயுற்ற விலங்குகளுக்கு சிகிச்சைகளை வழங்குவதற்கு அனுமதி அற்ற நிலையிலும் அரச கால்நடை வைத்தியர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் இச்சேவையை ஆற்றி வருகின்றனர் என்பதை அறியாத பண்ணையாளர்களின் முறைப்பாடுகளும், மேலும் பெரும்பாலான பண்ணையாளர்கள் மற்றைய அரச அலுவலகங்களைப் போல் அல்லாது எமது அலுவலகத்திற்கு வருகை தந்து முறையாகப் பதிவுகளை மேற்கொண்டு சேவைகளைப் பெற்றுக் கொள்ளாது தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு வைத்திய சேவைகளையும் ஆலோசனைகளையும் பெற முயற்சிக்கும் பொழுது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களையும் அத்துடன் போலி கால்நடை வைத்தியர்களைத் தொடர்பு கொண்டு தவறான சிகிச்சைகளையும் விலங்குகளுக்குப் பெற்றுக்கொடுத்து அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் கால்நடை வைத்தியர்களின் திருப்தியற்ற சேவையாக காட்ட முற்படுவது இச்சேவை மந்தகதியில் இருப்பது போன்ற தோற்றத்தையே உருவாக்கும்.

அரச கால்நடை வைத்தியர்களின் சேவைகள் வினைத்திறனாக இருப்பதற்கு பிரதானமாக வெளிக்களத்திலேயே கடமையாற்ற வேண்டிய தேவை உள்ள நிலையில், வடமாகாணத்தில் உள்ள 34 அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களில் மொத்தமாக 18 வாகனங்களே இயங்கு நிலையில் உள்ளன என்பதுடன் மாதம் ஒன்றிக்கு எரிபொருள் ஒதுக்கீடாக 7500 ரூபாவே வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் ஒவ்வொரு கால்நடை வைத்தியர் பிரிவுகளிலும் சேவை பெறும் பண்ணையாளர்களின் தேவை மற்றும் சேவை வழங்கும் தூரங்கள் என்பவற்றின் அடிப்படையில் எரிபொருள் ஒதுக்கீடுகள் கால்நடை வைத்தியர் அலுவலகங்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் பகிரப்படாமையாலும், வாகனங்களைப் பயன்படுத்தி அதி உச்ச சேவையை வழங்குவது சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது.

அத்துடன் கால்நடை வைத்தியர்களுக்கும் ஏனைய கடமையாற்றும் அலுவலர்களுக்குமான முறையான இடமாற்ற பொறிமுறைகள் மற்றும் கொள்கைகள் வடமாகாண உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் உரிய முறையில் உருவாக்கப்படாத காரணத்தால் இடமாற்றங்களின் போது கால்நடை வைத்தியர்களும் ஏனைய அலுவலகர்களும் மிகுந்த மன அழுத்தத்தை எதிர்கொள்வதால் உச்ச முறையில் சேவையை வழங்குவதில் சிரமமாகவுள்ளது.

பெரும்பாலான பண்ணையாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த முதலீட்டாளர்கள் கால்நடை வளர்க்கும் பண்ணைகளை ஆரம்பிக்கும் பொழுது எமது பிரதேசத்திற்கு பொருத்தமான கால்நடை வளர்ப்பு முறைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்கும் அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களை நாடாது இணையத்தளங்களில் இருந்தான தகவல்கள்ளையும் மற்றும் காணொளிகளினூடாக வழங்கப்படும் எமது பிரதேசத்திற்கு பொருந்தாத ஆலோசனைகளையும் பின்பற்றி ஆரம்ப அடிப்படைப் பண்ணைக் கட்டமைப்புக்களை தவறாக உருவாக்கியபின் அப்பண்ணைகள் நட்டத்தை எதிர்நோக்கும் பொழுது அவற்றை இலாபகரமாக மாற்ற கால்நடை வைத்தியர்கள் வழங்கும் ஆலோசனைகளைக்கூட சரியாகப் பின்பற்றாது நட்டத்தின் அளவு அதிகரிக்கும் பொழுது அந்நட்டத்திற்கான காரணத்தை கால்நடை வைத்தியர்கள் மீது சுமத்துவது சாதாரணமாக இடம்பெற்று வருகின்றது.

இவற்றுக்கு அப்பால் உற்பத்திப் பண்ணைகளில் இருந்து உரிய காலத்தில் கழிக்கப்பட வேண்டிய விலங்குகளை (வயது முதிர்ந்த மற்றும் உற்பத்தித் திறனற்ற) அகற்றுமாறு கால்நடை வைத்தியர்கள் ஆலோசனைகள் வழங்கும் பொழுது அவற்றை கருத்தில் கொள்ளாது அவற்றை பண்ணையில் தொடர்ச்சியாக வைத்திருக்கும் பொழுது அவை நோய்த்தாக்கத்திற்கு ஆளாகும் போது சிகிச்சை பலனளிக்காது இறக்கும் சந்தர்ப்பத்தில் அதனையும் கால்நடை வைத்தியர்களின் சேவைக் குறைபாடாகவே முன்வைக்கின்றனர்.

இவ்வாறான வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு எமது சங்கம் வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் ஏனைய பலதரப்பட்ட அரச அதிகாரிகளுக்கு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

மேற்கூறிய திணைக்கள நிர்வாகக் குறைபாடுகளையும், வளப்பற்றாக்குறையையும் கால்நடை வைத்திய சேவையின் தன்மையையும் கால்நடை வளர்க்கும் பண்ணையாளர்கள் சரியாக விளங்கிக் கொள்ளாத நிலையிலும் பல சிரமங்களுக்கு மத்தியில் அரச கால்நடை வைத்தியர்கள் மற்றும் அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்களினால் வழங்கும் சேவையை இதுவரை யாரும் பாராட்டாத நிலையில் அவர்களைக்குறை கூறி பிரசுரிக்கப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தினால் வடமாகாணத்தில் கடமையாற்றும் அரச கால்நடை வைத்தியர்கள் மிகுந்த மன அழுத்தத்தை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதை மிக மனவருத்தத்துடன் இங்கு கூற விரும்புகின்றோம்.

# சுகாதாரப் பிரிவினர் பணிப்பகிஷ்கரிப்பு

# நோயாளர்கள் பெரும் சிரமம்

(நெளுக்குளம்)

**வவுனியா வைத்தியசாலை தாதியர்கள், சுகாதாரப் பிரிவினர் 7 அம்சக் கோரிக்கையை முன்வைத்து நேற்று முதல் 48 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தனர்.**

இதன் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதாரப் பிரிவினர் கடமைக்குச் சமுகமளிக்காமையினால் நோயாளிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக சீரற்ற காலநிலை காரணமாக நேற்று பெய்த மழையினையும் பொருட்படுத்தாது வைத்தியசாலைக்கு பல்வேறு மருத்துவ தேவைக்காக வந்த நோயாளிகள் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (4-5-299)




# மாணவர்களுக்கான பேருந்து சேவை முழுமையாக இடம்பெற வேண்டும்

## துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தின் மாணவர்களை பாடசாலைக்கும் பாடசாலையில் இருந்து வீட்டிற்கும் சென்று வருவதினை இலக்காகக் கொண்டு பேருந்து சேவைகள் இடம் பெற வேண்டும் என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.மாலதி முகுந்தன் தெரிவித்தார்.

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், துணுக்காய் கோட்டங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று திரும்பக் கூடிய வகையில் பேருந்து சேவைகள் இடம் பெற வேண்டும் என தொடர்ச்சியாக கூட்டங்களில் வலியுறுத்தி வருகின்றோம்.

பழையமுறிகண்டி, பாலைப்பாணி போன்ற பாடசாலைகளுக்கு பேருந்து சேவைகளை நடத்துங்கள் என கேட்க முடியாது. இப்பாடசாலைகளில் மாணவர்கள் குறைவாக உள்ளனர். ஆனால் பேருந்துகள் பயணிக்கக் கூடிய பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களின் பெற்றோர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளோம் என மேலும் தெரிவித்தார். (4-5-350)

# நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவரை நியமியுங்கள்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனையில் இரவுப் பணியில் மருத்துவர் இல்லாததன் காரணமாக நோயாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

ஐயன்கன்குளம் மருத்துவமனைக்கு மருத்துவராக நியமிக்கப்பட்டவரே நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனையில் வாரத்தில் ஐந்து நாட்கள் பகலில் பணியாற்றுகிறார்.

இரவு வேளைகளில் நோயாளர்கள் சென்றால் அம்புலன்ஸ் மூலம் 10 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி ஆதார மருத்துவமனைக்கு நோயாளர்களை அனுப்ப வேண்டிய நிலை காணப்படுகிறது.

மாந்தை கிழக்கில் 3,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள்வாழ்கின்ற நிலையில் நட்டாங்கண்டல்பிரதேச மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் இல்லாததன் காரணமாக நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் பயன்கள் ஏற்படவில்லை.

எனவே முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாந்தை கிழக்கு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (4-350)

# மோட்டார் போக்குவரத்து திணைக்கள சேவைகள் இன்று முதல் வழமைக்கு

(பனிக்கன்குளம்)

கொவிட் தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த முல்லைத்தீவு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள பணியானது இன்று மீளவும் ஆரம்பிக்கப்படுகின்றதென முல்லைத்தீவு மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் அறிவித்துள்ளார்.

இருப்பினும் சாரதி அடையாள அட்டைகளை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 29 ஆம் திகதியிலிருந்து இடம் பெறும் என்பதுடன் அனைத்து சேவைகளுக்கும் கட்டாயமாக 021 2117116 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி திகதி மற்றும் நேரத்தினை முற்பதிவு செய்தபின் வருகைதர வேண்டுமெனவும் அறிவித்துள்ளார். (4-5-281)

# ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட மணல் நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என முல்லைதீவு மாவட்ட/ நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4-5)

# பாடசாலையில் வெள்ளம்



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காரணமாக பாடசாலைகளில் வெள்ளம் வடிந்தோட முடியாமல் இருப்பதன் காரணமாக தொற்றுநோய்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை காணப்படுகிறது.

குளங்கள் நிரம்பி வான் பாய்கின்ற நிலையில் மாவட்டத்தின் அனைத்து நீர் நிலைகளும் தற்போது நீர் நிரம்பி உள்ளன. கடந்த காலங்களில் மழை காலங்களில் பாடசாலைகள் விடுமுறை நாட்கள் என்பதனால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் தற்போது பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருப்பதன் காரணமாக மாணவர்கள் மழைக்கு மத்தியிலும் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

பாடசாலைகளின் சூழலில் பெருமளவு மழை வெள்ளம் தேங்கி நிற்கும் நிலையில் மாணவர்கள் வெள்ளத்தில் விளையாடுகின்ற நிலைமை காணப்படுகின்றன.

சுகாதாரத் தரப்பினரால் குளங்கள், ஏனைய நீர் நிலைகள், வெள்ளத்தில் மாணவர்கள் விளையாடக் கூடாது என்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மழை வெள்ளத்தில் விளையாடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. (4-5-350)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

மருதங்கேணி ஆழியவளைப்பகுதியில் கேரளாக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆழியவளை பகுதியில் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய குறித்த சந்தேக நபரை சோதித்த போது 1கிலோ 655கிராம் கேரளா கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் புதுக்குடியிருப்பு வல்லிபுர பகுதியைச் சேர்ந்தவர். மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-316)



கிண்ணியா படகு விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு முல்லைத்தீவு கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை மாணவர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

(படம் : தவசீலன், கிருஸ்ணகுமார் )

# உப தவிசாளர் தெரிவு

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் புதிய உப தவிசாளராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சி.சுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உப தவிசாளரான மகேந்திரன் கடந்த மாதம் சுகயீனம் காரணமாக உயிரிழந்ததையடுத்து வெற்றிடமாகக் காணப்பட்ட உப தவிசாளருக்கான தெரிவு நேற்று இடம்பெற்றது.

ஈ.ரோஸ் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தி சசிதரனும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக சி.சுப்பிரமணியமும் போட்டியிட்டனர். இதன்போது சி.சுப்பிரமணியம் வெற்றி பெற்று உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். (4-5-299)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2021- 15.12.2021



**வழிபாடே வளர்ச்சிக்கு காரணம் என்று சொல்லும் துலாம் இராசி வாசகர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் செவ்வாய்- சனி பார்வை உள்ளது. எனவே மிகமிக கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரமாகும். ஆரோக்கியத் தொல்லைகளும், அதிக விரயங்களும் ஏற்படும்.

### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

மாதத் தொடக்கத்தில் இருந்து கார்த்திகை 20 ஆம் திகதி வரை செவ்வாய்-சனியின் பார்வை இருக்கின்றது. இக்காலத்தில் மிக மிக கவனத்துடன் செயற்பட வேண்டும். ஆரோக்கியத்தில் சிறுசிறு அச்சுறுத்தல் வந்தாலும் அதை உடனடியாக மருத்துவ ஆலோசனை மூலம் நிவர்த்தி செய்து கொள்வது நல்லது. குடும்ப ஒற்றுமை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு சிலருக்கு குடியிருக்கும் வீட்டாலும் பிரச்சினைகள் வரலாம்.

### விருச்சிக புதனின் சஞ்சாரம்

கார்த்திகை முதல் நாளே விருச்சிக இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும். பயணங்கள் அதிகரிக்கும். புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### தனுசு புதனின் சஞ்சாரம்

கார்த்திகை 18 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்குள்ள சுக்கிரனோடு சேர்ந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாக அமையும். புத-சுக்கிர யோகம் ஏற்படுவதால் ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

## ஆரோக்கியத் தொல்லைகளும், அதிக விரயங்களும் ஏற்படும்

அரசாங்க ஆதரவு கிடைக்கும். தொழிலில் ஏற்பட்ட சரிவுகளை அகற்ற எடுத்த புது முயற்சி கைகூடும்.

### மகர சுக்கிரனின் சஞ்சாரம்

கார்த்திகை 19 ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிநாதனாகவும், அஷ்டமாதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன். தற்சமயம் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கமும், நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அஷ்டமத்துச் சனியில் பாதிப்பங்கு வலிமை பெற்றது அர்த்தாஷ்டமச் சனி. அவரோடு இராசிநாதன் சுக்கிரன் சேரும் பொழுது, விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்




டும். வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள், இடமாற்றங்கள் போன்றவை வரலாம். யாரையும் நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்க இயலாது.

### விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்

கார்த்திகை 20 ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இக்காலம் உங்களுக்கு ஒரு இனிய காலமாக அமையும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை இப்பொழுது சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் யோகம் உண்டு. ஆரோக்கியம் சீராகும்.

உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். ஒப்பந்தங்களும் படிப்படியாக வந்து சேரும். அனைத்து யோகங்களும் வந்து சேர அபிராமி அம்மனை வழிபடுவோம்.

### பெண்களுக்கான பலன்கள்

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கமும், சனி-செவ்வாயின் பார்வையும் இருப்பதால் குடும்பச்சுமை கூடும். தம்பதியர்களுக்குள் பிணக்குகள் அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். பிள்ளைகளால் விரயம் உண்டு. விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. வீடுமாற்றங்கள் உறுதியாகலாம். பணிபுரியும் இடத்தில் திருப்தி ஏற்படுவது அரிது.

**ஜோதிடக் கலாமணி சிவல்பூரி சிங்காரம்**



**நல்லதைச் செய்தால் நல்லதே நடக்கும் என்று சொல்லும் விருச்சிக இராசி வாசகர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் லாபாதிபதி புதனுடன் இணைந்து குருவால் பார்க்கப்படுவதால் 'குருமங்கள யோகம்' ஏற்படுகின்றது. எனவே இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். செல்வ நிலை உயரும். செயல்களில் வெற்றி கிடைக்கும். தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும்.

### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

மாதத் தொடக்கத்தில் இருந்து கார்த்திகை 20 ஆம் திகதி வரை செவ்வாய்-சனியின் பார்வை இருக்கின்றது. மகரத்திலுள்ள சனி துலாத்திலுள்ள செவ்வாயைப் பார்க்கின்றார். இராசிநாதனாகவும், 6இற்கு அதிபதியாகவும் விளங்கும் செவ்வாய் சகாய ஸ்தானத்திலுள்ள சனியைப் பார்க்கும் பொழுது நினைத்தது நிறைவேறும்.

பணவரவு திருப்தி தரும். இடம் வாங்குவது, வீடு கட்டுவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். பூமி வாங்கும் யோகம் உண்டு. பொன், பொருள் சேர்க்கையும் ஏற்படும்.

### விருச்சிக புதனின் சஞ்சாரம்

கார்த்திகை முதல் நாளே விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசியில் அடியெடுத்து வைக்கும் புதனால் நல்ல பலன்கள் இல்லம் தேடி வரப்போகின்றது. அரசாங்க வழியில் நன்மைகள் கிடைக்கும். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். தொழில் வெற்றி நடைபோடும். வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்வது பற்றிச் சிந்திப்பீர்கள்.

## பொன்,பொருள் சேர்க்கை ஏற்படும்

### தனுசு புதனின் சஞ்சாரம்

கார்த்திகை 18 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். இதன் விளைவாக கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும் யோகம் உண்டு. வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும்.

### மகர சுக்கிரனின் சஞ்சாரம்




கார்த்திகை 19 ஆம் திகதி மகர இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். சகோதர பாசம் அதிகரிக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

சுக ஸ்தானாதிபதியாகவும் சனி விளங்குவதால் வாழ்க்கைத்துணை வழியே நல்ல தகவல் கிடைக்கும்.

### விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்

கார்த்திகை 20 ஆம் திகதி விருச்சி இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிநாதன் செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உடல் நலம் சீராகும். தன வரவும் திருப்தி தரும்.

நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும். கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு முன்னேற்றம் அதிகரிக்கும்.

துணிந்து நீங்கள் எடுத்த முடிவால் வெற்றிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். காரிய வெற்றிக்கு கலைமகள் வழிபாட்டை மேற்கொள்ளவும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் செல்வநிலை உயரும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு. மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பணிபுரிபவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். அரசுவழி அனுகூலம் உண்டு.

(தொடரும்)

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

# சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் போராட்டம்

(கொழும்பு)


**சம்பளப்பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.**



சுகாதாரத்துறை தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தின் சுகாதார சேவையாளர்கள் நேற்று முதல் இரண்டு நாட்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். கொடுப்பனவு உள்ளிட்ட சில பிரச்சினைகளை முன்வைத்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகிறது. தாதியர், இடைநிலை, நிறைவுகாண் சுகாதார மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட 16 தொழிற்சங்கங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் பங்கேற்றுள்ளன.

இதற்கமைய, நாடு முழுவதும் 1,103 வைத்தியசாலைகள் மற்றும் 365 சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை என்பனவற்றில் இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் தொழில் வல்லுநர் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள சுகாதாரத் தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ், சுமார் 50 ஆயிரம் பேரளவில் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டார். சிறுவர் வைத்தியசாலை, புற்றுநோய் வைத்தியசாலை, மகப்பேற்று வைத்தியசாலை மற்றும் கொவிட் தொடர்புடைய வைத்தியசாலைகளில் எவ்வித பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படமாட்டாது. அவசர மற்றும் அத்தியாவசிய சேவைகள் இடம்பெறும் என சுகாதாரத் தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். (நி-5)

# கனடா பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை



(ஒட்டாவா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை சந்தித்து கலந்துரையாடினர்.

கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் கனேடிய பாராளுமன்றத்துக்கு சென்றிருந்த போது இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தனது முகப் புத்தகப்பக்கத்தில் தெரிவித்தார்.

இதன்போது எம் மக்களின் அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் வட கிழக்கில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளான காணி அபகரிப்பு மற்றும் வள சுரண்டல்கள் அதனுடன் கூடிய அரசியல் நெருக்கடிகள் தொடர்பாகவும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினோம்.

அத்துடன் கனேடிய அரசாங்கமானது எமது மக்களுக்கான தீர்வுத் திட்டங்களை மிக விரைவில் பெற்றுத் தருவதற்கு உரிய அழுத்தத்தை இலங்கை அரசு மேல் பிரயோகிக்க வேண்டும் எனவும் எமது ஆணித்தரமான கோரிக்கைகளை முன்வைத்தோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 52.2 வீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதி வருமானம் ஓராண்டு காலத்திற்குள் 52.2 சதவீதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி 248.8 பில்லியன் ரூபாய்களாக இருந்த இலங்கையின் ஏற்றுமதி வருமானம் - ஒக்டோபர் 2020 முதல் ஒக்டோபர் 2021 வரையான ஒரு ஆண்டு காலத்திற்குள் - 52.2% அதிகரித்து, 332.9 பில்லியன்கள் ஆகியுள்ளது என சுங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5)

# கொரோனா பரிசோதனைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றினைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறை தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தின் சுகாதார சேவையாளர்கள் இரண்டு நாட்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் அடிப்படையில் இரண்டு நாட்களும் கொரோனா தொடர்பிலான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## அந்த நாலு பேர்

நாலு பேர் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்? தினமும் நாலு தடவைக்கு மேல் நம் காதில் விழுவதோடு நம்மை நாமே பல முறை கேட்டுக்கொள்ளும் கேள்வி இது. அந்த நாலு பேருக்கு பயப்படுவதால் தான் உலகம் ஓரளவு நல்ல படியாகவும் மகிழ்ச்சிகரமாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த நாலு பேர் இருக்கிறார்களே! அவர்கள் மிக மிக கெட்டிக்காரர்கள். நம்மைப்பற்றி மிகச் சரியாகக் கணக்குப் போட்டு வைத்திருப்பார்கள். நாம் நம்மைப்பற்றி தெரிந்து வைத்திருப்பதை விட நம் ஜாதகத்தை கையில் வைத்திருக்கும் சோதிடரைவிட நம்மைப்பற்றி அழகாக புட்டு புட்டுச் சொல்லி விடக் கூடியவர்கள் இவர்கள்.

நாம் நம் இயல்பை மாற்றிக் கொண்டு செயற்பட்டாலும் நம்மைப் பற்றி நறுக்குத் தெறித்தாற் போல் ஒரே வரியில் விமர்சனம் செய்து விடக் கூடியவர்கள்.

சில சமயங்களில் நம்மைப்பற்றிய ஒரு விடயத்துக்கு கண், காது, மூக்கு ஒட்ட வைத்து முழு உருவம் கொடுத்துப் பேசினாலும் பெரும்பாலான நேரங்களில் இவர்களே சமுதாயத்தின் சரியான அளவு கோல்கள்.

அந்த நாலு பேருக்குப் பயந்து கொண்டு தீய காரியங்களைச் செய்யாமல் பயந்து முடங்கிக் கொண்டிருப்பவர்கள் கிடக்கட்டும்; சிலர் நல்ல காரியங்களை எடுத்துச் செய்யக்கூட அஞ்சுவது தான் வேடிக்கையான செயலாக இருக்கிறது. இத்தகையவர்கள் பழி பாவங்கள் வந்து சேரும் என்று நடுநடுங்கிச் சாவார்கள்.

இந்த நாலு பேரை எப்போது நாம் பொருட்படுத்த வேண்டும்? அவர்களுடைய கழுகுக் கண்களால் நாம் கொத்தப்படுவோமோ என்று எப்போது நாம் அஞ்ச வேண்டும்?

இந்த இரு கேள்விகளுக்கும் நாம் உடனே பதில் காண வேண்டும். நம்முடைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் தர்க்க ரீதியான காரணம் இருக்க வேண்டும்.

மேற்கண்ட முடிவைத் தவிர வேறு சரியான முடிவே இருக்க முடியாது என்ற சூழ்நிலை நிலவ வேண்டும். மனச்சாட்சியும் சட்டமும் இடங்கொடுக்க வேண்டும்.

பாதிக்கப்படுபவர்களை விடப் பயனடைபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும். இந்த நான்கு விதிகளைக் கடைப்பிடித்து வந்தால் அந்த நாலு பேருக்குப் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இவற்றையும் மீறி அந்த நாலு பேரால் நாம் தவறாக விமர்சனம் செய்யப்பட்டால் அதைப்பற்றி நாம் அஞ்சவோ கவலைப்படவோ வேண்டியதில்லை.

தேக்குமரம் செல்லரிக்கப்படுமோ என்று நாம் அஞ்சுவானேன்?

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## அதிசய பூசணிக்காய்

வீட்டில் மேல் பகுதியில் குருவிக் கூடு ஒன்றை அவரே செய்தார். குருவிகள் அவரும் அதில்தங்கும்என்று எதிர்பார்த்தார். அவர் எண்ணம் ஈடேறியது.


ஒரு குருவி வந்து அந்தக் கூட்டில் தங்கியது. நான்கு முட்டைகள்இட்டன. நான்கு குஞ்சுகள் வெளியே வந்தன. பாம்பு வரவே இல்லை.

பொறுமை இழந்த அவர் ஊரிலிருந்த பாம்பாட்டியிடம் சொல்லி, பெரிய கருநாகப்பாம்பை வீட்டில்கொண்டு வந்து குருவி கூட்டிற்கு அருகில் விட்டார், அந்தப் பாம்போ பசியில் இருந்ததால் ஓடி போய் 3 குஞ்சுகளை சாப்பிட்டு, ஏப்பம் விட்டது.

"ஐயோ, நான் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன் றாகிவிட்டதே என்று ஒரு பெரிய கம்புடன் குருவிக் கூட்டை நெருங்கினார், பாம்பை அடித்துக் கொன்று வெளியே போட்டார். மீதி இருந்த ஒரு குஞ்சைக் காப்பாற்றியது போல் நடித்தார். வேளை தவறாமல் உணவு அளித்தார்.

சில நாட்களில் தாய் குருவியும், ஒரு குஞ்சும் கூட்டை விட்டு வெளியேறியது. "மூன்று விதைகளுடன் குருவி மீண்டும் வரும். அரசனை விட செல்வன் ஆவேன்" என்ற எண்ணத்தில் காத்திருந்தார் அவர்.

அவர் எதிர்பார்த்த படியே கதவைத் தட்டியது குருவி. அவரிடம் மூன்று விதைகளைத் தந்தது. ஒன்றை வீட்டின் பின்புறம் நடு. இரண்டாவதை வீட்டின் முன்புறம் நடு. மூன்றாவதைக் கிணற்றோரம் நடு" என்று சொல்லி விட்டுப் பறந்து சென்றது. எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்ந்தார் அவர். மூன்று தானியங்களையும் நட்டார்.



மறுநாளே மூன்று பெரிய பூசணிக்காய்கள் காய்த்து இருந்தன. தோட்டத்தில் இருந்த பூசணிக்காயை வீட்டுக்குள் கொண்டு வந்தார். அதை வெட்டினார். அதற்குள் இருந்து எண்ணற்ற பூச்சிகள் வெளி வந்தன. அவர் வயலில் விளைந்திருந்த பயிர்களை எல்லாம் ஒரு நொடிக்குள் தின்று விட்டு மறைந்தன. வாயி லும் வயிற்றிலும் அடித்துக் கொண்டார் அவர்.

முன்புறத்தில் இருந்த இரண்டாவது பூசணிக்காயை வெட்டினார். அதற்குள் இருந்து தீ வெளிப்பட்டது அது அந்த மாளிகையை ஒரு நொடிக்குள் சாம்பல் ஆக்கியது. இத்தனை நடந்தும் அந்த பண்ணையார் திருந்தவில்லை.

ஐயோ எல்லாமே போய் விட்டதே, மூன்றாவது பூசணியிலாவது செல்வங்கள் இருக்கும் என்று எண்ணிய பண்ணையார் அதை வெட்ட, அதிலிருந்து கிளம்பிய பெரிய பூதம் அவரைத் தூக்கிக் கொண்டு பறந்தது. அதை அறிந்ததும் எல்லோரும் கொடிய பண்ணையார் ஒழிந்தார் என்று மகிழ்ந்தனர்.

பணம், பணம் என்று பேராசையால் ஏழை மக்களுக்கு துன்பம் உண்டாக்கிய பண்ணையார் இறந்து போன பின்பு, நல்ல தம்பி ஊர் மக்க ளுக்கு நிறைய உதவிகள் செய்தார், பள்ளிக்கூடங் கள், மருத்துவமனைகள் கட்டிக் கொடுத்தார். அவரும் அவரது குடும்பத்தாரும் நல்ல பெயர் பெற்று விளங்கினார்கள். (முற்றும்)

# மகாபாரதம்

254



அது கேட்ட இந்திரன் "இப்போது உன் நிலை உனக்கு வருத்தத்தைத் தருகிறதா? இல்லையா? என்றார்.

பலி சொன்னான் "உனது செல்வச் செருக்கால் அறிவிழந்து பேசுகிறாய். சில உண்மைகளைச் சொல்கிறேன் கேள்.. பொருட்களின் உண்மைத் தன்மை எனக்குத் தெரியும்.

செல்வம் நிலையில்லாதது. யாக்கையும் நிலையில்லாதது. உலகில் எல்லாமே அழியக் கூடியதுதான். இதை உணர்ந்து கொண்டதால் நான் எதற்கும் வருந்தாமல் இருக்கிறேன்.

இந்தக் கழுதைப் பிறவியும் நிலையில்லாததுதான். இப்படி உலக நிலையாமை என்னும் உண்மைகளைத் தெரிந்து கொண்ட ஒருவன் இவற்றின் அழிவு குறித்தும் வருந்தமாட்டான்.

இது உலக இயல்பு எனற தெளிவு ஏற்பட்ட பின் ஏன் நிலையாமை குறித்து வருந்த வேண்டும்? ஆறுகள் எல்லாம் கடலை அடைகின்றன. அது போலப் பிறவிகள் எல்லாம் மரணத்தை அடைகின்றன. இந்த இயற்கை நியதிகள் காலத்தால் ஏற்படுபவை என்ற தெளிவு ஏற்பட்ட பிறகு எதற்காகத் துக்கப்பட வேண்டும்?

ஒருவனை ஒருவன் கொன்று விட்டதாகவோ, வென்றுவிட்டதாகவோ எண்ணிப் பெருமிதம் அடைகிறான்.

உண்மையில் கொல்லுவதும் வெல்லுவதும் அவன் செயலன்று. அவனது கருமத் தின்செயல். அவன் அதற் குக் கர்த்தா அல்லன்.

வேறொருவன் கர்த்தாவாக இருக்கிறான். அவன்தான் பரமாத்மா. அவன்தான் எல்லாவற்றையும் காலத்திற்கு ஏற்றபடி இயக்குகிறான். அதன்படி அனைத்தும் இயங்குகின்றன. மாற்ற முடியாத சக்தி வாய்ந்தது காலம். அறிஞனையும்-முட்டாளையும், பலம் உள்ளவனையும்-பலம் இல்லாதவனையும், நல்லவனையும் -கெட்டவனையும், வள்ளலையும்-வறியவனையும் வேறுபாடில்லாமல் காலம் தன் வயப்படுத்திக் கொள்கிறது.

உலகமே காலத்தின் பிடியில்தான் இருக்கிறது. குழந்தை பிறப்பதும், வளர்வதும், வாலிபனாகத் திகழ்வதும், வயோதிபனாக மாறுவதும், மரணத்தைத் தழுவுவதும் காலத்தின் விளைவு என்பதை உணர்தல் வேண்டும்.

இப்படி யுகம் யுகமாகக் காலம் அனைத்துப் பொருளையும் மாற்றி அழித்து வருகிறது. இதற்குக் கடலைப் போல் கரை இல்லை. ஆகவே காலத்தைக் கடக்க யாராலும் இயலாது.

இப்போது கழுதையாக இருக்கும் நான் மேலும் பல வடிவங்களை எடுக்க முடியும். ஆனால் காலத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது. இந்த உலகமே காலத்தின் ஆதிக்கத்தில் இருக்கின்றது. பஞ்ச பூதங்களின் வேற்றுமையும் காலத்தின் விளைவுதான்.

காலத்தைக் காட்டிலும் ஆற்றல்மிக்க பொருள் உலகில் வேறொன்றுமில்லை. அது கண்ணுக்கு புலனாகாது. ஆயினும் இதனைச் சிலர் ஆண்டு என்றும் மாதம் என்றும் நாள்என்றும்காலை என்றும் மாலை என்றும் நிமிடம் என்றும் விநாடி என்றும் கூறுகின்றனர்.

இந்திரா..இந்த உலகம் எதன் வசம் இருக்கிறதோ அதுதான் காலம் என உணர்வாயாக. நீ ஆற்றல் மிக்கவன் என எண்ணிக்கொண்டிருக்கிறாய். உன்னைப் போல ஆற்றல் மிக்க பல இந்திரர்கள் கால வெள்ளத்தில் மறைந்தனர். (தொடரும்)

*நம் தவறுகளை நாமே உணர்ந்து கொள்வதை விட உயர்ந்த மனத்துணிவு வேறு கிடையாது.*
*- ஸ்ரீ அன்னை*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# நெஞ்சை உருக்கும் கிண்ணியாத் துயர்

திருகோணமலை கிண்ணியாவில் ஆற்றுப்படுக்கையில் நடந்த விபத்துச் சம்பவத்தில் ஏற்பட்ட அவல மரணங்கள் காற்றோடு கலந்து செய்தியாகச் செவிகளை எட்டியபோது நெஞ்சம் உருகிற்று.

இறைவா! ஏன் இந்தக் கொடுமை என்று உள்ளம் பதறிற்று.

நாளுக்கு நாள் நடந்தேறும் வீதி விபத்துக்கள் பலரின் உயிர்களைக் காவு கொள்கிறது.

பொறுப்பற்ற சாரதிகள் மலிந்த மண்ணாக நம் தேசம் மாறிவிட்டது.

பணத்தை இலக்குவைத்து சாரத்தியப் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் போதிய பயிற்சிகளை வழங்காது - வீதி விதிகளை அறிவுறுத்தாது சாரத்திய பரீட்சகருக்கு கையூட்டுக் கொடுத்து காரியத்தை முடித்துவிட, அந்தச் சாரதிகள் பலருக்குக் காரியம் செய்ய வைக்கின்றனர்.

இதற்கு மேலாக, இப்போது படித்தவர்கள் முதல் சாமானியர்கள் வரை வாகனம் ஓட்டும் போது கையடக்கத் தொலைபேசியில் உரையாடிய வண்ணம் வாகனம் செலுத்துவது சர்வசாதாரணமாயிற்று.

பொலிஸார் கண்ணுற்றால், ஐந்நூறு ஆயிரத்தோடு அந்த அலுவல் முடிந்து போகும்.

இவ்வாறான சூழ்நிலையில் வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற - ஏற்படப்போகின்ற மரணங்கள் அதிகரித்ததாக இருக்கும் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

என்ன செய்வது சாரத்தியப் பயிற்சி நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்கு ஆளில்லை.

சாரத்தியப் பயிற்சி வகுப்பை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடத்துவதற்கு ஏற்பாடில்லை.

இந்த நிலையில் பரீட்சையை மட்டும் நடத்தி சித்தி கொடுத்துவிட, அந்தச் சாரதிகள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் படிக்க வந்த ஏழை மாணவியை வெள்ளைக்கோட்டில் வைத்து யமலோகம் அனுப்புகின்றனர்.

என்ன செய்வது அரச கதிரைகளில், காவல்துறைகளில் ஈனத்தர்கள் இருந்தால் அப்பாவிகளின் உயிர்கள் துடிதுடித்துப் போகும் என்பதுதான் நிஜம்.

அந்தவகையில் திருகோணமலை கிண்ணியாவில் பொறுப்பற்றவர்களின் ஈனத்தனத்துக்கு அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

பாலம் திருத்துவதாக இருந்தால், பயணத்துக்கான மாற்றுவழி செய்ய வேண்டாமோ? அந்த மாற்று வழி பாதுகாப்பானதா என்று அறிய வேண்டாமோ?

ஐயகோ! அடுக்கிக் கிடக்கின்ற பள்ளிச் சிறார்களின் உடல்கள் கண்டு மெய் உடல் நடுங்குகிறது.

என்னே கொடுமை! தடுக்கவும் தவிர்க்க வும் கூடிய விபத்துக்கள் இவை.

இருந்தும் பொறுப்பற்றவர்களால் அருமந்த உயிர்கள் போகிறது என்னே துயர்.

# ராஜபக்ஷ அரசுக்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது

## சபையில் லக்ஸ்மன் கிரியெல்ல சாடல்

(கொழும்பு)

“இந்த அரசுக்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. அரசின் துருப்புச்சீட்டு இனவாதம் மட்டுமே. அது மட்டுமன்றி “ஒரே நாடு - ஒரே சட்டம” என்ற ஜனாதிபதி செயலணி மூலம் நாட்டுக்குத் தீ வைக்க அரசு முடிவெடுத்துள்ளது.” இவ்வாறு எதிரணியின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. சாடினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது இவ்வாறு சாடிய அவர்மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஏன் எமக்கு இன்னமும் வழங்கவில்லை? சமல் ராஜபக்ச உபகுழு அறிக்கையை எமக்கு வழங்க முடியுமா முடியாதா? பிரதமர் சபையில் உள்ளார். அவரிடமே இவற்றைக் கேட்கின்றோம்.

ஏற்கனவே முன்வைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மாற்றப்பட்டு புதிய பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஒவ்வொருவரை இலக்குவைத்து அவர்களைத் தெரிவு செய்து வழக்குத் தொடுக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முதலில் தகவல் தெரிந்தவர் மீது வழக்குத் தொடுக்கப்படாது. அப்போதைய ஜனாதிபதியைக் குற்றவாளியாக்குவதன் மூலமாக இந்த வழக்குத் தோற்கடிக்கப்படும்.

அதுமட்டுமல்ல ஒரு சிலரது தகவல்களை அரசு அழித்துவிட்டது. ஆகவே, நீதிமன்றத்தை மிதித்துக்கொண்டு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க முடியாது.

இதேவேளை, சகல அமைச்சுகளுக்கும் செயலணிகள் உருவாக்கப்பட்டு அமைச்சரவையைப் பலவீனப்படுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி சகல அதிகாரங்களையும் செயலணிகளை வைத்துக் கொண்டு இயக்கி வருகின்றார். அதேபோல் “ஒரே நாடு - ஒரே சட்டம்” என்ற ஜனாதிபதி செயலணியை உருவாக்கி நாட்டுக்குத் தீ வைக்க முடிவெடுத்துள்ளனர்.

இனவாதத்தை உருவாக்கி நாட்டைத் தீ வைக்கவே அரச தரப்பினர் நினைக்கின்றனர். இந்த அரசுக்கு இனவாதத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாது. அவர்களின் துருப்புச்சீட்டு இனவாதம் மட்டுமே. அதனைத்தான் அவர்கள் முன்னெடுக்கின்றனர் என்றார். (ம)

# பருத்தித்துறை நகர சபை பட்ஜெட்டில் பங்கேற்ற உறுப்பினருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர சபை வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் பங்கேற்ற உறுப்பினர் ஒருவருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் வரவு -செலவுத் திட்டம் தவிசாளரால் நேற்று முன்வைக்கப்பட்டது. ஒரு மேலதிக வாக்கினால் வரவு -செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்த வாக்கெடுப்பின் போது கலந்துகொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் உடல்நலக் குறைவுடன் காணப்பட்டுள்ளார்.

அவர் வாக்கெடுப்பின் பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம)

### கிண்ணியா குறிஞ்சாக்கேணி விபத்து

# படகு உரிமையாளர் உள்ளிட்ட மூவர் கைதாகி மறியலில்

(திருகோணமலை)

திருகோணமலை, கிண்ணியா - குறிஞ்சாக்கேணியில் நீரில் மூழ்கி படகுப் பாதை விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மூவரும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி, மோட்டார் பொருத்தப்பட்ட படகுப் பாதையை இயக்கிய இருவரும், அதன் உரிமையாளரும் நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறிஞ்சாக்கேணியில் நேற்று முன்தினம் குறித்த மிதப்புப் பாலம் நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 10 பேர் உயிரிழந்ததுடன், 20க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டிருந்தனர். (ம)


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**“இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்.”**

**- மிகைல் கோபர்ச்சேவ் (சோவியத் யூனியனின் முன்னாள் ஜனாதிபதி)**

# சத்திய தரிசனம்

## தங்கம் போல துன்பப்படுவோம்



- காட்டில் இருக்கும் சிறிய விறகிற்கு தீ வைத்தால், விறகு மட்டும் எரிவதோடு நின்று விடாது. காட்டையே அழித்துவிட்டுத்தான் அணையும். அதுபோலவே, மனிதர்களின் மனதில் உண்டாகும் தீய எண்ணம் என்னும் தீயானது அவர்களை மட்டுமின்றி, அவர்களை சுற்றியுள்ளவர்களையும் அழித்து விடும். ஆகவே, எண்ணங்கள் சுத்தமாக இருக்க வேண்டும்.
- எந்த வேலையையும் முழு ஈடுபாட்டுடன் செய்யுங்கள். அவை உங்களுக்கு விருப்பம் இல்லாத வேலை என்றாலும், உங்களை நம்பி கொடுக்கப்பட்டிருப்பதால் அதனை எத்தகைய சிரத்தை எடுத்தாவது சிறப்பாக முடிக்க வேண்டும். அவ்வாறில்லாமல், பெயருக்கு இயந்திரம் போல செய்யக்கூடாது. இது, எண்ணெய் இல்லாத விளக்கில், பிரகாசிக்காமல் எரியும் திரிக்கு ஒப்பானதாகும். மனதில் “ஈடுபாடு“ என்ற எண்ணெயை விட்டு பணி செய்தால்தான், முடிவும் சுடர்போல பிரகாசமாக இருக்கும்.
- உலோகங்களில் எல்லாம் உயர்ந்த தங்கத்தை, தீயில் போட்டு உருக்குகின்றனர். இதனை, தங்கத்தை வெறுப்பதற்காக தீயில் போடப்பட்டதாக சொல்லமுடியாது. அதை தீயில் இட்டால், அழுக்குகள் தானாக நீங்கிவிடும். அதைப்போலவே, மனிதர்கள் தங்களிடமுள்ள மன அழுக்குகளை நீக்கி, பரிசுத்தமானவர்களாக திகழவே கடவுள் துன்பங்களைக் கொடுக்கிறார். இதனைப் புரிந்து கொண்டு துன்பத்தை இன்பமாக ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். இத்தகையவர்கள், கடவுளுக்கு ஒப்பானவர்கள் ஆவர்.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

23

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



இந்து- அரபு எண்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட எட்டாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே அவை அரபு மொழி பேசும் உலகில் பயன்படுத்தப்படுகின்றன.

அப்ஜாத் அமைப்பில், அரபு எழுத்துக்களின் முதல் எழுத்து, 1 ஐக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது எழுத்து 2 ஐக் குறிக்கும். இவ்வாறு 9 வரை எழுத்துக்களுக்கு 3,4,... என்று பெறுமானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பின்னர் 10,20 என 90 வரைக்கும் பின்னர் 100, 200 எனப் பெறுமானம் கொடுக்கப்பட்டு 1000 உடன் முடிவடையும். இவ்வெண்கள் உரு 17Aயில் காட்டப்பட்டுள்ளன.

கான எண் மதிப்புகள் ஒன்றாக சேர்க்கப்படுகின்றன. இந்த அமைப்பின் பின்னால் உள்ள கொள்கைகள் பண்டைய கிரேக்க எண்கள் மற்றும் ஹீப்ரு எண்களுக்கு சமமானவை. நவீன ஆர்மீனியாவில், பழக்கமான அரபு எண்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நவீன ஆங்கிலத்தில் உரோம எண்களைப் போல ஆர்மீனிய எண்கள் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றன. ஆர்மீனிய எண் அமைப்பில் உள்ள எண்கள் எளிய சேர்த்தல் மூலம் பெறப்படுகின்றன. ஆர்மீனிய எண்கள் ஆர்மீனிய மொழியைப் போல இடமிருந்து வலமாக எழுதப்படுகின்றன. 9999

### உரு 17 A அப்ஜாத் எண்கள்(Abjad numerals)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ا | ب | ج | د | ه | و | ز | ح | ط | ى |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| ك | ل | م | ن | ص | ع | ف | ض | | |
| 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 | | |
| ق | ر | س | ت | ث | خ | ذ | ظ | | |
| 100 | 200 | 300 | 400 | 500 | 600 | 700 | 800 | | |
| غ | ش | | | | | | | | |
| 900 | 1000 | | | | | | | | |

**அப்சாத் எண் முறைமை அகரவரிசை எண் அமைப்புக் குறியீடு ஆகும். இதில் அரபு எழுத்துக்களின் 28 எழுத்துக்களுக்கும் எண் மதிப்புகள் ஒதுக்கப்பட்டன. இம் முறைமை எட்டாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே அரபு மொழி பேசும் உலகில் பயன்படுத்தப்படுகின்றன.**

**ஆர்மீனிய எண்கள்** (Armenian numerals) **(4 ஆம் நூற்றாண்டு).**

ஆர்மீனியா, அதிகாரபூர்வமாக ஆர்மீனியக் குடியரசு என்பது, காக்கசசு மலைப்பகுதியில் கிழக்கு ஐரோப்பாவுக்கும் தென்மேற்கு ஆசியாவுக்கும் இடையில் உள்ள எல்லைப்பகுதியில் அமைந்துள்ள நாடு ஆகும். ஆர்மீனிய எண்களின் அமைப்பு என்பது ஆர்மீனிய எழுத்துக்களின் பெரிய எழுத்துக்கள் (upper case) பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு வரலாற்று எண் அமைப்பு ஆகும்.

பழைய அமைப்பில் பூச்சியத்திற்கான குறியீடு எதுவும் இல்லை, மேலும் தனிப்பட்ட எழுத்துக்களுக்

ஐ விட அதிகமான எண்களை எழுத, 9000 இற்கும் அதிகமான மதிப்புகளைக் கொண்ட எண்களைக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். இது அவ் எழுத்துகள் மீது ஒரு கோடு (வரி) வரைவதன் மூலம் செய்யப்படுகிறது, அவற்றின் மதிப்பு 10000 ஆல் பெருக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இது உரோமன் எண்களைப் போன்றது, ஆனால் அங்கு ஒரு வரி ஒரு எழுத்து என்பது தொடர்புடைய மதிப்பை 1000 ஆல் பெருக்குவதாகும் (உரு 17 மற்றும் உரு 17A ஐப்பார்க்க).

### உரு 17 ஆர்மீனிய எண்கள் (Armenian Numbers)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Ա | Բ | Գ | Դ | Ե | Զ | Է | Ը | Թ |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| Ժ | Ի | Լ | Խ | Ծ | Կ | Հ | Ձ | Ղ |
| 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 |
| Ճ | Մ | Յ | Ն | Շ | Ո | Չ | Պ | Ջ |
| 100 | 200 | 300 | 400 | 500 | 600 | 700 | 800 | 900 |
| Ռ | Ս | Վ | Տ | Ր | Ց | Ւ | Փ | Ք |
| 1000 | 2000 | 3000 | 4000 | 5000 | 6000 | 7000 | 8000 | 9000 |

### உரு 17A ஆர்மீனிய எண்கள் உதாரணங்கள்

ՌՋՀԵ = 1000 + 900 + 70 + 5 =1975

ՍՄԻԲ = 2000 + 200 + 20 + 2 = 2222

ՍԴ = 2000 + 4 = 2004

ՃԻ = 120 = 100 + 20

Ծ = 50

Ա̅ = 10000

Ջ̅ = 900x10000= 9000000

Ռ̅Ճ̅Խ̅Գ̅ՌՄԾԵ =

1000x10000+100x10000+43x10000+
1000+200+50+5=11431255

### நீங்களும் முயற்சிக்கலாம் 17

ՏՈԺԹன் பெறுமானம் என்ன?

விடை= 4000+600+10+9
= 4619

**ஆர்மீனிய எண்களின் அமைப்பு என்பது ஆர்மீனிய எழுத்துக்களின் பெரிய எழுத்துக்கள் upper case பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஓர் எண் அமைப்பு ஆகும். இந்த அமைப்பின் பின்னால் உள்ள கொள்கைகள் பண்டைய கிரேக்க எண்கள் மற்றும் ஹீப்ரு எண்களுக்கு சமமானவை.**

**உரோமன் எண் முறை (கி.மு. 900-800 ஆண்டு).**

உரோமன் எண்ணுரு (Roman numerals) முறைமை பண்டைய உரோமில் உருவான ஓர் எண்குறி

முறைமையாகும். இம்முறை, உரோமைப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும், ஐரோப்பா முழுவதும் பதினான்காம் நூற்றாண்டு வரையும் அதன் பின்னரும் நடைமுறையில் இருந்து வந்தது. பின்னர், இவை பெரும்பாலும் மிகவும் எளிதான இந்து-அராபிய எண்ணுருக்களால் மாற்றீடு செய்யப்பட்டன.

உரோமன் எண்ணுருக்கள் பழைய உரோமன் எண்ணுருவான எத்துருசிய (Etruscan) எண்ணுருவிலிருந்து உருவானது.

இவ்வடிவமானது இப்போது நாம் பயன்படுத்தும் அமைப்பிலிருந்து சற்று மாறுபட்டதாகும். எடுத்துக்காட்டாக, I,V,X,L,C,M ஆகியவற்றுக்கு I,Λ,X,↑,8,⊗ ஆகிய எத்துருசியக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் I,X ஆகியன மட்டுமே எழுத்துக்களைக் கொண்டிருந்தன.

**உரோமன் எண்ணுருக்களில் பூச்சியம் இல்லை. உரோமன் எண்ணுருக்கள் பழைய உரோமன் எண்ணுருவான எத்துருசிய (Etruscan) எண்ணுருவிலிருந்து உருவானது. இவ்வடிவமானது இப்போது நாம் பயன்படுத்தும் அமைப்பிலிருந்து சற்று மாறுபட்டதாகும்.**

(தொடரும்)

## 23 பேர்...

தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14,205 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## நினைவேந்தல்...

சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதைப் பொதிகள் வழங்கும் நிகழ்விற்கு வருகைதந்த இராஜாங்க அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் வழங்கும்போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், இழப்புகளைச் சந்தித்தவர்கள் சட்டத்திற்கு உட்பட்டு வீடுகளில் நினைவேந்தல்களை அனுஷ்டிக்க முடியும்.

அவர்களுக்கு நாங்கள் இந்த இடத்திலே ஆறுதலை சொல்ல விரும்புகிறோம் என்றார். (ம)

## இரசாயன உர...

சாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இவைகளின் இறக்குமதிக்கு தடை விதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் உடன் அமுலாகும் வகையில் இரத்துச் செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## வடக்கில்...

கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் காலநிலை அவதானி நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

வங்களா விரிகுடாவில் தாழமுக்கம் உருவாகியுள்ளதால் எதிர்வரும் 27.11.2021 சனிக்கிழமைவரை தொடர்ச்சியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு கன மழை கிடைக்கும் சாத்தியமுள்ளது.

தொடர்ச்சியாக கனமழை கிடைக்கும் சாத்தியம் உள்ளதால் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருப்பது அவசியமாகும்.

மீனவர்கள் எதிர்வரும் 27.11.2021 வரை கடலுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

## 4 வயது...

வன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சூடுவெந்தபுலவு பகுதியில் வசித்து வரும் தாய் ஒருவர் தனது பிள்ளைகளுடன் பாவற்குளம் குளத்திற்கு நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது 4 வயது சிறுவனை குளத்தில் நீராட விட்டு தாய் கரைக்கு வந்து திரும்பி பார்க்கும்போது, குளத்திற்குள் நீராடிக் கொண்டிருந்த சிறுவனைக் காணவில்லை. இதனையடுத்து தாயார் அங்கு நின்றவர்கள் மற்றும் கிராமத்தினரை அழைத்து சிறுவனை தேடியபோது சிறுவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிய வருகிறது.

சம்பவத்தில் வவுனியா, சூடுவெந்த புலவு பகுதியை சேர்ந்த அம்ஜத் என்ற 4 வயது சிறுவனே மரணமடைந்துள்ளார்.

மேலும் சிறுவனுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-250,299)

## 6 வயது சிறுமி...

கடத்தி சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் 25 வயதான இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் பெற்றோருடனான பணக் கொடுக்கல் - வாங்கலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக குறித்த இளைஞன் சிறுமியைக் கடத்தி சித்திரவதை செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் சந்தேகநபரான இளைஞனை கைது செய்ததுடன் சிறுமியையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-30,104)

## 'தேசியத் தலை...

என்று விளித்தமைக்கு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கு நேற்று பாராளுமன்றில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அவரின் உரையை பாராளுமன்றப் பதிவேடான ஹன்சாட்டில் இருந்து நீக்க வேண்டும் என்றும் பெரும்பான்மை இன உறுப்பினர்கள் பாராளுமன்றில் வலியுறுத்தினர்.

எனினும் சபைக்கு தலைமை தாங்கிய பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனுக்கு இருக்கின்ற கருத்துரிமையை இல்லாது செய்ய முடியாது என்றும் இந்த விடயத்தை சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகவும் கூறினார். (ம)

## இலங்கைத்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பு குறித்து தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் டுவிட்டர் பதிவில், இலங்கை தமிழ் மக்களுடன் நிரந்தர சமாதானத்தையும் அவர்கள் நாட்டின் எதிர்காலத்தைத் தீர மானிப்பதில் முழுக் குரலையும் தேடுவதில் தானும் இணைந்துகொள்வதாக லூ கூறினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் உலகளாவிய தமிழ் மன்றத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம)

## மாகாண சபை...

பண்டார எம்.பி. கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம். எமது பக்கத்தில் தவறு இடம்பெற்றதுதான். அது சரி செய்யப்பட வேண்டும். அதற்கான ஆதரவை நாம் வழங்குவோம்.

எனவே, எமது தவறை மட்டும் சுட்டிக் காட்டிக் கொண்டு தேர்தலை இழுத்தடிக்க வேண்டாம். இரு வருடங்கள் தவறை மட்டும்தான் கூறிக் கொண்டிருக்கின்றீர்கள்.

அதேபோல் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் இரு வருடங்களுக்கு ஒத்திவைப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது" என்றார். (ம)

## நினை...

மற்றும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டோர் சார்பிலான சட்டத்தரணிகள் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்து தடை உத்தரவு கட்டளையை மீள்பரிசீலனை செய்யக் கோரினர்.

அதற்கு பொலிஸார் கடும் ஆட்சேபனையை முன்வைத்து சமர்ப்பணம் செய்தனர்.

இருதரப்பு சமர்ப்பணங்களை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம், தடை உத்தரவு கட்டளையை மீளப்பெற முடியாது என்றும் பிரதிவாதிகள் சார்பிலான ஆட்சேபனையை மேல் நீதிமன்றில் முன்வைத்து வாதாட முடியும் என்றும் அறிவுறுத்தினார். (ம-33)

## சுவிஸில்...

றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் அங்கிருந்த பெறுமதியான பொருட்களும் அடித்து சேதப்படுத்தப்பட்டன.

சம்பவம் தொடர்பில் சிசிரிவி காட்சிகளை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் ஆராய்ந்தனர்.

அதனடிப்படையில் மானிப்பாய் பகுதியில் சந்தேகநபர்கள் இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

காணிப் பிரச்சினை ஒன்றில் அயல் வீட்டுக்காரருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

மானிப்பாயை சேர்ந்த ஒருவருக்கு சுவிட்ஸர்லாந்தில் வசிக்கும் நபர் ஒருவர் 3 லட்சம் ரூபாய் பணம் கொடுத்து அயல் வீட்டிற்கு பெற்றோல் குண்டு அடித்து வீட்டையும் அடித்துச் சேதப்படுத்தி அச்சுறுத்தல் விடுக்குமாறு கேட்டுள்ளார்.

அதன் காரணமாக மானிப்பாயை சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு பணம் வந்து அவர் தன்னுடன் உள்ள இளைஞர்களை கூட்டிச் சென்று சம்பவத்தை செய்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (ம-18,33)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1170
வெற்றி இலக்கங்கள்
கடகம் 4 4 8 6 8 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0944
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
U 12 21 56 58 73

மஹஜன சம்பத
திகதி 2021/11/24
சீட்டிழுப்பு இலக்கம் 4596
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
C 5 6 2 2 5 8
தேசிய லொத்தர் சபை

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB
சீட்டிழுப்பு திகதி 24.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2891
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
X 17 67 74 78

தன நிதானய
திகதி - 2021.11.24
சீட்டிழுப்பு இலக்கம் - 626
O 07 36 62 63
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1399
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 24.11.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,288,400
வெற்றி இலக்கங்கள் 06 19 33 61
ஆங்கில எழுத்து B
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3734
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 24.11.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,433,020
வெற்றி இலக்கங்கள் 08 32 54 68
ஆங்கில எழுத்து Z
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1573
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 24.11.2021
தினம் புதன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
I 49 54 64 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 71,561,950/=

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 104
சீட்டிழுப்பு திகதி 24.11.2021
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 30 37
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,312,320/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,188,201/=
திகதி 24.11.2021
வெற்றி வாரம் 3285
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 04 21 33 40
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,861,061/=

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1788
சீட்டிழுப்பு திகதி 24.11.2021
வெற்றி இலக்கங்கள் 06 11 27 65
ஆங்கில எழுத்து A
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 28,255,608/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# சீரற்ற காலநிலை யாழில் 632 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் சீரற்ற காலநிலை காரணமாக 183 குடும்பங்களைச் சேர்ந்த 632 நபர்கள் காரைநகரில் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய காலநிலை தொடர்பாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு நேற்று மாலை நான்கு மணிவரையான நிலவரம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், நேற்று முதல் பெய்தமழை மற்றும் அதிக காற்று காரணமாக 183 குடும்பங்களைச் சேர்ந்த 632 நபர்கள் காரைநகரில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் இரண்டு குடும்பத்தினர் தற்காலிகமாக உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனரென தெரிவிக்கப்படுகிறது. (ம -104)

# 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 'பூஸ்டர்'

(கொழும்பு)

இலங்கையில் 20 வயதுக்கு மேற்பட்ட குடிமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசியின் மூன்றாவது அலகை (பூஸ்டர்) வழங்க நேற்று தீர்மானிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் சில தினங்களில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம)


## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

(C-3089)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் (8778)

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ். நகர் சுண்டிக்குளியை அண்மித்த பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு முழுநேர, பகுதிநேர பணியாளர்கள் தேவை. மேலாளர், Room Assistant (அறை உதவியாளர்), ஆண்/ பெண் துப்புரவு பணியாளர் தலா ஒருவர் தேவை. கீழ்க் காணும் இலக்கத்திற்கு Whatsapp/ Viber மூலமாக பிற்பகல் ஒரு மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். (8769)

+44 7397 910191

## விரைவு பொதிகள் சேவை

## V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3014)

0768226240 DHL

## வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில், கல்வியங்காடு, K.K.S வீதியில் வீடு வாடகைக்கு தேவை. (மேல்வீட்டு பகுதி மென் மேலும் விரும்பத்தக்கது.) (8777)

077 623 7956


## தவறிவிட்டது

யாழ். பஸ்ரியன் சந்திக்கு அண்மையாக திறப்புக் கோர்வை அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. யாராவது கண்டெடுத்திருப்பின் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவும்படி கேட்டுக் கொள்கின்றோம். (8756)

076 704 9048

சாள்ஸ் மல்ரி சொப் இல.377, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (கத்தோலிக்க அச்சகம் முன்பாக)

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்னாள் தர்மகர்த்தா சபை உப தலைவர் அமரர் **செ. தம்பித்துரை** அவர்களின் புதல்வனும் தற்போதைய தர்மகர்த்தா சபை உறுப்பினர் திரு. **த. பகீரதராஜ்** அவர்களின் அன்புச் சகோதரனும் எமது ஆலயத்துடன் சிறுவயதுமுதல் பற்றுக் கொண்டவருமான

அமரர்

### தம்பித்துரை சஞ்சீவ்ராஜ்

அவர்கள் இங்கிலாந்து நாட்டில் இயற்கை எய்திய செய்தி அறிந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகப் பெருமானின் திருவடிகளைச் சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(8775)

பிரிவால் துயருறும்

தர்மகர்த்தா சபை

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

## மரண அறிவித்தல்



பிறப்பு 08 – 08 – 1937

இறப்பு 24 – 11 – 2021

### மகேஸ்வரி செல்லத்துரை

கோணாவளை கரணவாய் தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி செல்லத்துரை நேற்று (24.11.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளைக்குட்டி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் செல்வமகாலட்சுமி (ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி - கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை உப அலுவலகம், உடுப்பிட்டி), காலஞ்சென்ற ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவம், மதனமோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr. துளசி, Dr. காயத்திரி, Dr. ஜனனி, ஜனகன், கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராசலட்சுமி, துரைராசா, லீலாவதி, காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, தங்கமுத்து, கமலாதேவி, ராஜரட்ணம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.11.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவரசம் திட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-3088)

கோணாவளை, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தகவல் :- சிவம் (மருமகன்) சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி.


## NEW SCIENCE UNIVERSE

THINK POSSIBLE NEW SCIENCE UNIVERSE LOGA

A/L 2021 Exam Batch இற்கான

இரசாயனவியல் & பௌதிகவியல்

கருத்தரங்கு ஆரம்பமாகிறது....

25 நாட்கள்

நவம்பர் 29 முதல்...

FULL THEORY & QUESTIONS

(8779)

நாம் 50 மாணவர்கள் மட்டுமே இணைத்துக்கொள்ள இருப்பதால் அனுமதிகளை உடனடியாக எமது கல்வி நிறுவனத்தில் பெறவும்.

076 322 0916 DIRECTOR of NSU

1 Day (8 hours) 500/= only

No. 52, Stanly road, Jaffna.

கல்வியில் ஆர்வமுள்ள (பாடங்களை கற்க தவறிய) மாணவர்கள் விரும்பத்தக்கது.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.